
# பக்தி விஜயம்..

ஆனி - 2012
ரதம் : 01
வழி : 02



இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்





## ஆனிமாத சிறப்புகள்

நரசிம்ம அவதாரம் வவுனியாவில்..!

"என்னைத்தொடாதே" நீலகண்டரின் நிலை

தெய்வீக சந்தேகங்கள்

" ஹேராம்! " காந்தியின் கதறல்

ஒரு கோப்பை தேநீரில் ஆன்மபலம்

விவேகானந்தரின் 150

100/=

மன்னாரில் இருந்து வெளிவரும் ஆன்மீக இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மூர் புண்ணிய தலங்கள் ..



கீரிமலைத் தீர்த்தமாடி, நகுலேஸ்வரம் தரிசிப்பீர் ..

இலங்கையின் வட கரைக்கு கிடைத்த அதி விஷேட தீர்த்தம் இது. புராண சிவத்தலத்தை கொண்டு புண்ணியம் தருகின்ற இதன் புராதன பெயர் திருத்தம்பலை. இங்கு கோயில் கொண்டருள்கின்ற இறைவனின் புராதன நாமம் திருத்தம்பலேசுவரர்.

பார்த்தாலே புண்ணியம் கிடைக்கின்ற இத் தீர்த்தத்தில் கீரி முகமுடைய முனிவர் ஒருவர் நீராடி அருகிலுள்ள பெருமானை வழிபட்டு வந்ததாலேயே கீரிமுகம் நீங்கப்பெற்றார். இதனால் கீரிமலை என்ற பெயர் கொண்டு இது அழைக்கப் படுகிறது. இப்பெயர் வடமொழியில் நகுலகிரி என்றானதால், இங்கு அருள் பாலிக்கும் பெருமான் நகுலேஸ்வரர் ஆனார். அம்மையும் நகுலாம்பிகை-நகுலேஸ்வரி என்று திருநாமம் சூட்டப்பட்டு, தலமும் நகுலேஸ்வரம் ஆனது.



தீர்த்தமும், தலமும் ஒருங்கே நாடி யாத்திரை புரிவோர்க்கு ஏற்ற சிறப்பான தலங்களில் ஒன்று இது. அர்ச்சுனன், நளன், முசுகுந்தன் போன்றோர் வழிபட்ட இது, நெடுந்தூரம் கற்பாறைகளைக்கொண்ட கடல் பகுதியாகும். எனினும், மழையினால் ஏற்படுகின்ற நன்மையால் நந்நீர் சுரந்து இங்கு பல பகுதிகளிலும் தேங்கியிருப்பது அற்புதமாகும். மாருதப்புரவீரவள்ளி நீராடி, தனது குன்ம நோய் நீங்கப்பெற்ற தெய்வீக தீர்த்தம் இந்த கீரிமலையாகும்.



நித்திய, நைமித்திய பூஜைகள் கிரமமாக நடந்தேறுகின்ற இப் புண்ணிய தலத்தில், மாசி மாதத்தில் பதினைந்து நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறுகிறது. மாசி மகாசிவராத்திரியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறுகிறது. என்னே பாக்கியம்! பல அற்புதமான வரலாறுகளையும், கீர்த்திகளையும் கொண்டு விளங்கும் இப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, தல வழிபாடு செய்தால் பாவங்கள் விலகும். தோஷங்கள் நீங்கும். புண்ணியமும், வளமும் கைகூடும்.

இதோ, மிக அண்மையில்தான். வருவீர், வழிபடுவீர் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THIRUKEETHEESHWARAM HINDU SOCIETY
Reg. No : HA / 4 / MM / 30
20/02/2007
THIRUKEETHEESHWARAM
MANNAR

மாந்தை மேற்கு பிரதேச சபை
26 JUN 20
நூலகம்


# பக்தி
## விஜயம்



மங்கலம் தரும் மங்கையர் பகுதிகள் ..

# சாவித்திரி விரதம்..

சாவித்திரி விரதம் ஏற்போர் சௌமாங்கல்யம், புத்திர பௌத்திர பாக்கியம், செல்வம் முதலானவற்றைப் பெற்றிடுவர் ..



இந்து சமூகத்தின் ஆன்மீக எழுத்துப்பணியில் ..

இந்து சமூகத்தின் ஆன்மீக எழுத்துப்பணியில் ..

இதழ் உருவாக்கம், கணனி வடிவமைப்பு, நிர்வாக இயக்கம்:
எஸ்.பி. முத்து

அனுசரணை:
வை. திருச்செல்வம்

இந்த பக்திச் சஞ்சிகை வெளிவரும் முகவரி:
555, புதுத்தெரு,
மன்னார்,
இலங்கை.
தொலை பேசி:
071- 3861168
023- 2250071
077- 4335144

சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன. அவற்றுக்கு நன்றிகள். வாசகர்களும் சமய செய்திகள், ஆக்கங்கள் தருவதோடு கருத்துக்களையும் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

**அற்புதமான ஆனிமாதத்திலே ..**

நிலவொளி பாலாகக் கொட்டிய ஒரு பௌர்ணமி தினத்தில் சாவித்திரி பிறந்தாள். அது இன்னொரு நிலவு பூமிக்கு வந்தது போல இருந்தது. அப்படியொரு அழகு!

அசுவபதி மகராஜன் தனக்கொரு குழந்தையை வேண்டி, மகாசக்தி சாவித்திரியை ஆராதித்தான். அவன்முன் தோன்றிய அன்னை, தனது அம்சத்தையே ஒரு பெண்ணாக்கி அவனிடம் தந்தாள். அகமகிழ்ந்துபோன மன்னன், 'சாவித்திரி' என்றே அக் குழந்தைக்கு பெயரிட்டான்.

பெண்குலத்துக்கே சாவித்திரியால் கிடைத்த பெருமை தெரியும்தானே! காலனையே எதிர்த்து கணவன் உயிர் மீட்டவளன்றோ ..! அப்படியான கற்புத் தெய்வத்தின் விரதம் இந்த ஆனி மாதம் கொண்டிருப்பதை அறிவீர்களா ..?

ஆம் ...

''சத்தியவான் ஒரு ஏழை, அற்ப ஆயுள் கொண்டவன்.'' என்று நாரதர் எடுத்துக்கூறியும், தான் மனதால் வரித்த சத்தியவானையே மணந்தாள். அவனுக்கு மரணம் சமீபித்துவிட்டதை அறிந்து, அவள் பூண்ட விரதமே எமனை எதிர்கொள்ளும் பலத்தை கொடுத்தது. இழந்த தன் பதியை எமனிடமிருந்து மீட்டதோடு, மாமனார் மாமியார் கண்களையும், இராச்சியத்தையும், பெற்றோருக்கு ஒரு புத்திர பாக்கியத்தையும் பெற்றாள்.

ஆதலால், அந்த விரதம் செய்வோர் சௌமாங்கல்யம், புத்திர பௌத்திர பாக்கியம், செல்வம் முதலானவற்றைப் பெற்றிடுவர் ..








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் நாட்களும், விரதங்களும்

அற்புதமான
ஆனிமாதத்திலே
..



மூன்றாம் திகதி, செவ்வாய்கிழமை
பூரணை விரதம்

ஏழாந் திகதி, சனிக்கிழமை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

பதினான்காம் திகதி, சனிக்கிழமை
ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம்

பதினாறாந் திகதி, திங்கட்கிழமை
ஆடிப்பிறப்பு, பிரதோஷ விரதம்

பத்தொன்பதாம் திகதி, வியாழக்கிழமை
அமாவாசை


பதினேழாந் திகதி, செவ்வாய்க்கிழமை
முதலாம் ஆடிச்செவ்வாய்

இருபத்திரெண்டாம் திகதி,
ஞாயிற்றுக்கிழமை
நாக சதுர்த்தி விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அற்புதமான ஆனிமாதத்திலே ..



இருபத்திமூன்றாம் திகதி, திங்கட்கிழமை
ஆடிப்பூரம்

இருபத்திநான்காம் திகதி, செவ்வாய்க்கிழமை
ஷஷ்டி விரதம், நல்லூர் கந்த சுவாமி கொடியேற்றம்.

இருபத்தாறாம் திகதி, வியாழக்கிழமை
சுந்தரமுர்த்தி நாயனார் குருபூஜை



இருபத்தேழாம் திகதி, வெள்ளிக்கிழமை
வரலஷ்மி விரதம்

இருபத்தொன்பதாம் திகதி, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி விரதம்

முப்பதாம் திகதி, திங்கட்கிழமை
பிரதோஷ விரதம்

முப்பத்தோராந் திகதி, செவ்வாய்க்கிழமை
மூன்றாம் ஆடிச்செவ்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மாணவர் சமய அறிவுப்போட்டி!

## இல: .. 02

அன்பான மாணவர்களே, சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த சஞ்சிகை உங்களுக்கும் பயனளிக்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்காக மட்டுமல்லாமல், வாழ்க்கையிலும் வெற்றி பெறுவதற்கு சமயப் பாடங்களில் குறியாக இருக்க வேண்டும்.

குடும்பத்தோடு நீங்களும் சேர்ந்து வாசித்து இன்புறுவதோடு, கீழே தரப்படுகின்ற போட்டியிலும் கலந்துகொள்ளுங்கள்.

அனைத்துக் கேள்விகளுக்கும் சரியாக பதில் தருபவர்கள், குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு, பரிசுகள் பெறுவீர்கள்.

விடைகளை அனுப்பவேண்டிய கடைசித் திகதி : 20.06.2012

01. பெரிய புராணம் அருளியவர் ....................................
02. குண்டலகேசி ............................ காப்பியங்களில் ஒன்று
03. இராவணனின் வாகனம் ................................. ஆகும்
04. பாண்டவர்களில் நான்காவது சகோதரன் .................... ஆவான்
05. சகுந்தலை ............................முனிவரின் சாபத்திற்கு ஆளானாள்
06. விஷத்தை உண்டதால் ஈசனுக்கு, ......................என்ற பெயர் வந்
07. மனைவியை காளியம்மனாக பூஜித்து வழிபட்டவர் ......................
08. திருக்கோணேஸ்வரத்தில் இறைவியின் பெயர் ..............................
09. .......................... சுக்ரீவனின் மந்திரியாக பணியாற்றிக்கொண்டிரு
10. பூமியைக் காப்பதற்கு மகாவிஸ்ணு ..................... அவதாரம் எடு



இப்பக்கத்தை கத்தரித்து அனுப்பவேண்டியதில்லை.
சாதாரண பேப்பரிலேயே
விடைகளை எழுதி அனுப்பவும் ...




முகவரி :
ஆசிரியர்,
'பக்தி விஜயம்'
555, புதுத்தெரு,
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிகள் பக்கம் ..



பகவான் ரஜ்னீஸ், தற்போது 'ஓஷோ' என்ற பெயரால் மட்டுமே அழைக்கப் படுகிறார் ..


எண்ணிலடங்கா சித்தர்களையும், ஞானிகளையும் நமக்காக பரிசளித்து இருக்கிறது நம் இந்து சமயம் ..

நாம் நம்மை முழுமையாக தேடி அடையும் தருணமே கடவுள்.

அந்த அற்புதமான தருணத்தை அடையும் வழிகளை நமக்கு புரிய வைப்பதற்காக எத்தனை எத்தனையோ எளிமையான சொற்களில் அவர்கள் பெரிதும் முயன்றனர்.

அந்த வரிசையில் பகவான் ரஜ்னீஸின் வார்த்தைகள் புதுமை மிக்கது, புரட்சியானது, காந்தம்போல கருத்தை ஈர்க்கவல்லது. நம் ஆன்மாவை கணப்பொழுதில் காண்பிக்கவல்லவை அவரின் காந்த வார்த்தைகள் ..

# ஓஷோ



**சீடன்:** ..

*''குருவே,*
*கடவுள் உண்டா இல்லையா?*
*இந்த உலகத்தை படைத்தது யார்?*
*சுவர்க்க நரகங்கள் உண்டா, இல்லை? முன்வினைப் பயன், மறுபிறவி உண்மையா பொய்யா?''*

**ஜென் குரு:**

*'' வா, ஒரு கோப்பை தேநீர் சாப்பிடலாம் ..''*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காத்திருத்தல் எவ்வளவு
சுவையானது!
வாழ்வே ஒரு
காத்திருத்தல்தான்.!
விதை முளை
விடக்காத்திருக்கிறது.
நதி கடலை அடையக்
காத்திருக்கிறது.
மனிதன் எதற்கு
காத்திருக்கிறான்?

அவனும் ஒரு மரத்தின்
விதையே.
ஒரு கடலை நாடும்
நதியே.

உள்ளே உற்றுநோக்கும்
யாரும், தங்கள்
ஆழத்தில், முடிவில்லாத
எல்லையில்லாத
நிலையையே தாங்கள்
நாடுவதை அறிவார்கள்.
இதைத்
தெரிந்துகொண்டவன்
கடவுள் நோக்கிய
பயணத்தை ஆரம்பித்தவன்
ஆகிறான்.
ஆம்.
தாகமெடுத்தவன் தண்ணீர்
தேடாமலா இருப்பான்?
ஆனால், அப்படி எங்கும்,
எப்போதும் நடக்காது.
எங்கே தேடுதல்
இருக்கிறதோ, அங்கே
அடையும் தாகம்
இருக்கிறது.
இந்த தாகத்தை அறிய,
எல்லோரின் வாழ்வும்
காத்திருத்தலாக
மாறவேண்டுமென்பதே
என் விருப்பம்.
அதுவே இறைவனை
சந்திக்க வைக்கும்!

**த**மது பகவானின் பெயர் **'ஓஷோ'** என்று மாற்றப்பட்டது தெரியாமல் பக்தர்கள் இருந்த காலங்களும் இருக்கின்றன.

வில்லியம் ஜேம்ஸ் குறிப்பிட்ட **'ஓஷியானிக்'** என்ற சொல்லில் இருந்து தமது பெயர் உருவானதாக ஓஷோ குறிப்பிட்டாராம்.

'ஓஷியானிக்' என்றால் கரைந்து போவது என்று பொருள். அந்த சொல் அனுபவத்தை மட்டுமே குறிக்கின்றது. ஆனால் அனுபவிப்பவரை குறிப்பிடவில்லை. அதனால், **'ஓஷோ'** என்ற சொல்லை உருவாக்கினேன் என்கிறார், ஓஷோ'.

ஆனால், இந்தச் சொல் கீழை நாடுகளில், நீண்ட காலமாக வேறு ஒரு பொருளிலும் பயன்படுத்தப்பட்டு வருவதை ஓஷோ பின்னால் கண்டுகொண்டார்.

அதன் பொருள்: ..
'வானம் பூச்சொரிந்து ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிக்குள் விதை மழைக்காக் காத்திருப்பது
போல நீ கடவுளுக்காக காத்திரு.

நீ உன்னை முழுமையாக அனுமதித்துவிடு--
ஒரு படகு ஆற்றில் மிதப்பதைப்போல.
துடுப்பு ஏதுவும் போடாதே.
கட்டுப்படுத்தாமல் அதன்போக்கிலேயே
செல்லவிடு.

நீ நீந்த வேண்டாம். சும்மா மித.
பின் நதியே உன்னை கடலில் சேர்த்து விடும்.

கடல் மிகவும் அருகிலேயே இருக்கிறது--
ஆனால் மிதப்பவர்களுக்குத்தான்.
நீந்துபவர்களுக்காக அல்ல.
நீந்த முயலாதே. அது தவறு.
முழ்கிவிடும் பயம், முன்னேறும்
லட்சியங்கள் உன்னை நீந்த
வைக்கப்பார்க்கும்.
இறைமையில்தான் முழ்குவாய், என்றும்
காப்பாற்றப்படுவாய்.
எப்போதும் நினைவில் வைத்துக்கொள்! எங்கு
போய் சேர்கிறாயோ,
அதுவே நீ போகவேண்டிய இடம்.

லட்சியங்கள் வேண்டாம் ..
கடவுளைக்கூட லட்சியமாக
வைத்தவன் சிதறி,
வழிதவறிப்
போய்விடுகிறான்.
எங்கே ஒரு மனம்
லட்சியமற்று
இருக்கிறதோ, விடுதலை
அடைகிறதோ அங்கு
மட்டுமே இறைமை
மலர்கிறது ..



சத்தியம் ..
அது இங்கேதான்!


தேட வேண்டும் --
தன் தனக்குள்ளே
தன் தனக்குள்ளே
தன் தனக்குள்ளே

அது கண்டிப்பாக அங்கே இருக்கிறது. முதலில் முழுமையாகு. வாழ்வை முழுமையாக எடுத்துக்கொள். அதை துண்டுகளாக, துகள்களாக பார்க்கும் பார்வை எதற்கு?

அது எப்போதுமே முழுமைதான். ஆனால், நீண்ட காலமாகவே துண்டு துண்டுகளாக, பகுதி பகுதியாக பார்க்கப்படுவதால் தவறாகவே அது புரிந்துகொள்ளப்படுகிறது.

அரசியல், பண்பாடு, மதம் எதுவுமே தனித்தனியாக, கூறுகூறாக அங்கு இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதன் அடிமையாகிப்போனான்.
ஏனெனில், தனிமைக்கு பயந்து.
அந்தப் பயத்தால் ஒரு கூட்டம், சமூகம், சங்கம் என்று அவனுக்குத் தேவைப்பட்டது. பயமே அத்தனைக்கும் காரணம்.
பயந்த மனத்தால் எப்படி சத்தியத்தை அறியமுடியும்?
சத்தியத்தை அறிய, துணிவு வேண்டும்.
துணிவு தவத்தால் வருகிறது --
எந்த கூட்டத்திலிருந்தும் அல்ல.

ஆகவேதான் --
எல்லா மதங்களும், சங்கங்களும், அமைப்புகளும் சத்தியத்தை தேடும் பாதையை மறைக்கின்றன ..
முடுகின்றன ..
தடை செய்கின்றன ..

ஏன் எல்லாவற்றிலும் பயனைத் தேடுகிறாய்?
நீ இப்படித் தேடுவதாலேயே அது கிடைக்காமல் போகும்.
ஏனெனில், அது எப்போதும் தேடுபவனிடமே மறைந்திருக்கிறது.

எந்தப் பலனும், பயனும் அற்றதே வாழ்வு.
காரணம், வாழ்வின் பெரும் பயனே வாழ்தல்தான்.
வாழு! வாழ்வது மட்டுமே போதாதா? வாழ்வதை விடவும் அதிகம் வேண்டுமா?
அந்த ஆசை, சரியாக வாழாத வாழ்வின் விளைவு.

ஆகாயம் பயன் நோக்காது, பரந்து விரிந்திருக்கிறது --
பூக்கள் பலன் பாராது பூத்துக் குலுங்குகின்றன --
விண்மீன்கள் விடைதேடாது கண் சிமிட்டுகின்றன --
மனிதனுக்கு மட்டும் என்னாயிற்று?
அவன் மட்டும் ஏன் பலன் தேடுகிறான்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்துவிடு, அப்போதுதான்
நீ வாழ முடியும்.
ஒரு விதை தன்னை
அழித்துக்கொண்டுதான்
மரமாகிறது.
ஒரு துளி தன்னை இழந்த
பின்பே கடலாகிறது.

ஆனால் மனிதன்?
அவன் தன்னை இழக்கத்
தயாரில்லை. பின் எப்படி
இறைமையுடன் இவனால்
சங்கமிக்க முடியும்?

மனிதன் விதை. இறைமை
மரம்.
மனிதன் துளி. இறைமை
கடல் ..
புரிந்ததா ..?

உன் புதிய பிறப்பிற்கு என்
வாழ்த்துக்கள். சந்நியாசம்
என்பது ஒரு புதிய பிறப்பே --
ஒருவனுக்குள், ஒருவனால்,
ஒருவனே ..

உன் இறப்பு சாதாரணமானது
அல்ல. மிகப்பெரிய இறப்பு.
நேற்றுவரை
உன்னுடையவனான
எல்லாவற்றின் இறப்பு.
ஒவ்வொரு கணமும்
இறந்துவிடு: புதிதாக
பிறந்துவிடு.
'நீயாக'யாக தொடர்ந்து ஒரு
கணமும் இருக்காதே!
'வாழ்வதற்கு' இதுதான்
ஒரே வழி.

நதியைப் போல வாழு,
குளத்தைப் போல அல்ல.
சம்சாரி குளமாயிருப்பவன்.
சந்நியாசி நதி.



இறுதியாக --
சொற்கள் உள்ளவரை உண்மைப்
பொருள் இருக்காது.
நானும் இங்கே சொற்களால்தான்
சொல்கிறேன்.
பிறகு என்ன செய்வது?
எனினும் --
சொற்களுக்கு இடையில் படித்துப்
பார்!
சொல்லப்பட்டதைப் படி.
எழுதப்பட்டதைப் படிக்காதே!
ஏனெனில் சொற்கள் வெளியே
உள்ளன --
பொருள் உள்ளேதான்
இருக்கிறது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையுலகில் ஆன்மீகம் ..

# “இசைதான் எனது தியானம் ..!”



## கே.ஜே.ஜேசுதாஸ்

**தேமதுரக் குரலால் உலகைக் கட்டிப் போட்டிருப்பவர், பாடகர் கே.ஜே. ஜேசுதாஸ். அவரின் சங்கீத சாதனையில் ஆன்மீகத்தின் பங்கு எவ்வளவு என்று அவரிடம் கேட்ட போது ..**

‘‘முழுவதுமே ஆன்மீகத்தால் கிடைத்தவைதான் ..” என்று பரவசத்தோடு கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார் ..

‘‘ பக்தியும், பிரார்த்தனையும் தனி மனிதனுக்கு முக்கியம். மூச்சு விடுவதுபோல இன்றியிமையாத வேலையாக இருக்க வேண்டும். நாம் எந்த வேலையை செய்யும்போதும், என்ன பேசிக்கொண்டிருக்கும்போதும் சுவாசமானது உடலோடு ஒட்டியிருக்கிறதல்லவா? அதுபோல ஆன்மாவுடன் ஆன்மீகம் இணைந்திருப்பதே சிறப்பு ..”

அவரது பக்தி உணர்வை வரவேற்பறையில் தொடங்கி, வீடு முழுவதுமே காணலாம் என்கிறார்கள், அவரைச் சந்தித்தவர்கள். அதிலும் இறைபக்தியோடு, குருபக்தியையும் இணைத்து நேர்த்தியான கச்சேரிகள் தருகின்ற வித்துவானாக வாழ்கிறார்.

சங்கீதம் என்கிற மகாசாகரத்தில் திளைத்து வாழும் அவரின் பூஜையறையில் தெய்வங்களும் ரசிகர்களாக இருக்கின்றன. சரஸ்வதியும், கன்னிமேரியும் இக் கலைஞனை தினமும் ஆசீர்வதித்து வழியனுப்புகிறார்கள். கூடவே, அவரின் குருவாகிய செம்பை வைத்தியநாத பாகவதரின் படமும் மலர்மாலைகளைச் சூடியவாறு பூஜையறையை அலங்கரிக்கிறது.

செம்மங்குடி சீனிவாச ஐயர், தியாகையர் போன்றோரின் திருவுருவப் படங்களும் அங்கே உரிய கௌரவத்துடன் தொங்குகின்றன.

ஆன்மீகம் பற்றிய கருத்துக்கள் இந்த இசை மேதையின் அனுபவத்தில் எப்படி வருகிறது என்று பாருங்கள் ..

‘‘ பிறக்கும்போதே மனிதனுக்குள் இரண்டு குணங்கள் வளர்கின்றன. ஒன்று ராட்சத குணம், மற்றொன்று சாத்வீக குணம். ராட்சத குணம் என்ற செடிக்கு தண்ணீரோ, உரமோ தேவைப்படுவதில்லை. எந்த கவனிப்புமின்றி அது தானாகவே வளர்ந்து கொண்டிருக்கும். ஆனால், ஆன்மீக உணர்வுள்ள சாத்வீக குணம் அப்படியல்ல. அதை மிகுந்த கவனத்துடன் பராமரிக்கவேண்டும். சரியாக உரமிட்டு, தவறாமல் நீர் பாய்ச்சவேண்டும். ஆடு போன்ற பகைவர்களிடம் இருந்தும் பாதுகாக்கவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலி போட்டு காக்கவேண்டும். இப்படி மாயைகளிடமிருந்து அந்த சாத்வீக குணத்தை பாதுகாத்தே ஆன்மீக நெறியை வளர்க்கவேண்டும் ..'கடவுள் நம்பிக்கையும் அப்படித்தான். உலக மாயையிடம் இருந்து விடுபட வேண்டும். அப்போதுதான் நிம்மதி ..'' என்றார்.

ஆன்மீக அனுட்டானங்களில் கிடைக்கும் பலனை அனுபவித்து, வெற்றிகளை குவிக்கும் அவரிடம் ஆழ்நிலைத் தியானம் பற்றி கருத்து கேட்டபோது ..

''பலபேர் பல விதமாக பதில் சொல்வார்கள். ஆனால், எல்லா பதில்களும் 'கொன்ஸன்ட்ரேஸன்' என்ற மன நிலையையே குறிப்பிடுகிறது. ஏதாவது ஒரு நினைப்பில் மனதை ஒழுங்குபடுத்துவது, பலவித சிந்தனைகள் அலைமோதினாலும் அவற்றை ஒதுக்கிவிட்டு மனதை ஒருமுகமாக்குவது, தேவையான ஒன்றில் மட்டும் தியானம் செய்வது இப்படி பலகோணங்களிலும் புரிந்துகொள்ளலாம். அந்த வகையில் நான் இசையை தியானம் செய்கிறேன். மனம் நெகிழ்ந்து நான் பாடும்போது, சூழ்நிலையையே மறந்துவிடுகிறேன். எதிரே இருக்கின்ற எல்லாப் பொருள்களுமே மறைந்துவிடுகின்றன. வீட்டில் சாதகம் செய்யும்போதும் சரி, வெளியே சென்று கச்சேரி நடத்தும் போதும் சரி -- என்னையே இழந்துவிடுகிறேன். இதுதான் என்னைப்பொறுத்த வரையில் ஆழ்நிலைத் தியானம் ..'' என்றார்.



அழகான படங்களோடும், சிலைகளோடும் காட்சி தரும் அவரின் சிறிய பூஜையறையில் தெய்வீகம் கமழ்கிறது. கடவுளின் உருவம் என்பது, இறைவனின் அடையாளம்தான். தவிர, பரம்பொருள் என்று உணரும்போது அது எங்கும் நிறைந்திருக்கிறது என்பதுபோல் அவரின் வீடெங்கும் தெய்வீகம்தான் தெரிந்தது. அதிலும், அந்த வீட்டில் எங்கோ ஒரு மூலையில் இருந்து, அவரின் ஒரு சங்கீதம் எல்லா இடங்களிலும் மென்மையாக ஒலித்துக்கொண்டேயிருந்தது.

தினமும் அந்த பூஜையறையில் நின்று பிரார்த்தனை செய்கிறார் ஜேசுதாஸ். மனமுருக வேண்டிக்கொள்கிறார்.

அப்படி என்னதான் வேண்டுகிறீர்கள் என்ற கேள்விக்கு ..

''எனக்கென்று வேண்டிக்கொள்ளுதல் என்பது ஒரு வேண்டுதலே அல்லவென்பது என் கருத்து. புகழும், வசதியும் வந்துவிட்டதால்தான் மற்றவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன் என்று நினைக்கவேண்டாம். இது எனது சிறுவயதுப் பழக்கம். எனக்கு என்ன தரவேண்டுமென்று கடவுளுக்குத் தெரியும். அதுபோலவே தருகிறார். ஆரம்பத்தில் நிறைய கஷ்டங்கள் தந்தார். அதைத்தாங்கும் மனவலிமையும் கூடவே தந்தார். இப்போது உயரத்தில் வைத்திருக்கிறார். அதனால் கனம் வந்துவிடாத பக்குவமும் தந்திருக்கிறார்..''
என்றார் தனது சங்கீதக்குரலில்.

(நன்றியுடன் பெப்ரவரி, 2002 பக்தி குமுதத்திலிருந்து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடல் -- 01



# "என்னைத் தொடாதே .."

# திருநீலகண்டர்

திருநீலகண்டரின் சிவபக்தியை அறியாதார் இருக்க முடியாது. அவரது பக்தியை அடிக்கடி சோதித்து மகிழ்வது ஈசனுக்கு வழக்கம்.

அதுபோலவே ஒருமுறை விதிவசத்தால் திருநீலகண்டர் தாசி வீட்டுக்குப் போய்விட்டார். வீடு திரும்பியதும் தன் மனைவியின் கடும் கோபத்திற்கு ஆளானார்.



''சிவபிரான் மேல் ஆணை.., இனி என்னைத் தொடாதீர் ..' என்று சொல்லிவிட்டாள் மனைவி.

இதனால் மிகவும் மனமுடைந்தார் நீலகண்டர். அதிலிருந்து தன் மனைவியை மட்டுமல்ல, எந்தப்பெண்ணையும் தொடுவதில்லையென்று உறுதி எடுத்தார். இது மிகவும் உலகை ஈர்த்த புராண சம்பவம்.

இந்த தம்பதியின் விசித்திரமான பிரச்சினையை தீர்த்துவைக்க திருவுளம் கொண்டார் சிவபெருமான். தனது இனிய நீலகண்டனுக்கு ஒன்று என்றால் சும்மா இருப்பாரா?

ஒருநாள், கபாலிக சந்நியாசி வேடத்தில் நீலகண்டரின் வீட்டுக்கு வந்தார் பெருமான். தனது திருவோட்டை அவரிடம் கொடுத்து, ''இதை பத்தரமாக வைத்துக்கொள். ஊருக்குப் போய்விட்டு வந்து பெற்றுக்கொள்கிறேன் ..'' என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

சில நாட்கள் கழித்து மீண்டும் திரும்பி வந்த சந்நியாசி, திருவோட்டைத் தருமாறு கேட்டார். திருநீலகண்டர் அதனைத் தேடிப்பார்த்தபோது அது இருக்கவில்லை. இதனால் கோபமுற்ற சந்நியாசி தனது திருவோட்டை திருடிவிட்டதாக குற்றம் சுமத்தினார். இதனால் வருந்திய நீலகண்டர் தான் திருடனல்ல என்று எவ்வளவோ கெஞ்சினார்.


சந்நியாசியோ விடுவதாக இல்லை.

''நீ சொல்வது உண்மையானால், உன் மனைவியின் கையைப் பிடித்து குளத்தில் மூழ்கி, இருவரும் சத்தியம் செய்ய வேண்டும்.'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அவரின் பிடிவாதத்தை மாற்றமுடியாத நிலையில் பிரச்சினை பஞ்சாயத்துக்குப்போனது. பிரச்சினையைக் கேட்டறிந்த பஞ்சாயத்தாரும், சந்நியாசிக்கு ஆதரவாகவே தீர்ப்பளித்தனர்.


அதாவது, சந்நியாசி கேட்டுக்கொண்டவாறே திருநீலகண்டர் சத்தியம் செய்தாக வேண்டும். வேறு வழியில்லாமல் இதற்கு ஆயத்தமானார் நீலகண்டர். மனைவியோடு குளத்திற்கு வந்தவர், ஒரு மூங்கில் தடியை எடுத்து ஒரு முனையை மனைவியிடம் கொடுத்து பிடிக்கச் சொன்னார். மறுமுனையை தானும் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்க ஆயத்தமானபோது தடுத்தார் சந்நியாசி. 'பெண்டாட்டியின் கையைப்பிடித்துத்தான் மூழ்கவேண்டு'மென்றார்.

அதனால் தனக்கும் மனைவிக்குமுள்ள பிரச்சினையை ஊர் அறிய பஞ்சாயத்தினரிடம் சொன்னார் நீலகண்டர். அவர்களும் மூங்கில் சத்தியத்திற்கு உடன்படவே, இருவரும் மூங்கில் கழியை பற்றியவாறு குளத்தினுள் மூழ்கினர்.

என்ன ஆச்சரியம்! மூழ்கி எழுந்தபோது, இருவரும் தமது முதுமையை நீக்கி, இளமையோடு காட்சியளித்தார்கள். கபாலிக சந்நியாசியும் காணாமல்போனார். ஊரார்கள் மெய்சிலிர்த்து நின்றனர்.

இது எம்பெருமானின் திருவிளையாடல் என்பதை உணர்ந்துகொண்ட திருநீலகண்டர், பிணக்கு தீர்ந்து மனைவியுடன் புதிய வாழ்வை தொடங்கினார்.

இதுநாள்வரை இழந்திருந்த மகிழ்ச்சியை அருளிய இறைவன், அதற்கான இளமையையும் தந்த கருணைக்கு ஈடேது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வீக சந்தேகங்கள் ..


### கடவுளுக்கு காணிக்கை என்று முடியை கொடுப்பது எதனால் ..? அது சரியா ..?

ஒருவர் தனது அங்க உறுப்புகள் மீது அளவற்ற பிரியம் வைத்திருப்பது இயல்பு. அதிலும் தலைமயிர்மீது உயிரையே வைத்திருப்பார்கள். அதை அழகுபடுத்திக் கொள்வதே பிரதான வேலையாக இருக்கும். அந்த முடியையே இறைவனுக்கு கொடுக்க முன்வருவது சாதாரணச் செயலல்ல. அதற்கான விலை இறை அன்பேயாகும். தவிர, நம் அழகை தியாகம் செய்யும்போது நம்முள் அகந்தையும் குறைகிறது.



### நல்லவர்களையே இறைவன் சோதிப்பது ஏன் ..?

அப்படி நினைப்பது பிரமை. எல்லோரிடமும் இறைவனின் அன்பு ஒரே மாதிரியானதே ..



### கோயில்களில் குடம்குடமாகபாலும், அபிஷேகங்களுக்கு விலை உயர்ந்த பொருட்களும், செலவுகளும் பொது விஷயங்களுக்கு பயன் படுத்தலாம் என்று எப்போதுமே ஒரு கருத்து இருக்கிறதே ..?

இந்த கருத்து எப்போதும் இருந்து வருகின்ற ஒன்றுதான் .. ஆனால் ஒன்றை கவனிக்கத் தவறுகிறார்கள். முறையான வாழ்வில் கோயில் காரியங்களும் அடங்குகின்றன. கோயில்களில் முறையான பூஜைகளுக்காக செலவாகும் பொருட்கள், பொது நன்மைகளையே தருகிறது. ஊர் முழுவதற்கும் கிடைக்கின்ற நன்மையை கணக்கிடும்போது, கோயில் செலவு என்பது சிறு புள்ளியே. நிச்சயமாக அது விரயம் அல்ல ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு பிடித்தமான நைவேத்தியங்கள் பெருமளவில் இருக்கின்றன. அவை கோயில்களில் கச்சிதமாக கவனத்தோடு படைக்கப்படுகின்றன. ஆனால், வீடுகளில் குறிப்பிட்ட சிலவற்றை மட்டுமே எல்லா பூஜைகளுகளிலும் செய்து படைக்கிறார்கள். கொஞ்சம் கவனமெடுத்தால், எத்தனையோ பிரசாத வகைகளை செய்து தெய்வத்தை சந்தோஸப்படுத்தலாம் .. அருளும் பெறலாம்.



# விரத சமையல்கள் ..

## மகிழ்விக்கும் அடை வகைகள் ...

இவற்றில் வெல்ல அடை, உப்பு அடை என்று இரண்டு வகை செய்து படைப்பார்கள்..

**வெல்ல அடைக்கு தேவையானவைகள் :**

பச்சரிசி அரை கிலோ, காராமணி 100 கிராம், வெல்லம் அரை கிலோ, தேங்காய் ஒரு மூடி, ஏலக்காய் 10.

**செய்முறை :**

அரிசியை ஊறவைத்து, களைந்து காய வைக்கவேண்டும். பின் மென்மையாக அரைத்து சலித்தெடுக்கவும். செந்நிறமாக வறுக்கவும். வெல்லத்ததை தூள் செய்து வைத்துக்கொள்ளவும். காராமணியை வாசனை வரும் அளவுக்கு வறுத்து பின்னர் வேக வைத்து, தண்ணீரை வடிகட்டிவிடவும். தேங்காயை பல்பல்லாக கீறி வைத்திருக்கவும்.

அகலமான பாத்திரத்தில் தேவையான அளவு தண்ணீர் விட்டு அதில் வெல்லத்தை போட்டு கொதிக்க விடவும். வெல்லம் கரைந்ததும், ஏலப்பொடியை போட்டுவிட்டு, காராமணியையும், கீறி வைத்திருக்கும் தேங்காயையும் போடவும்.

ஏற்கனவே வறுத்து வைத்திருக்கும் மாவை அதில் ஒரு கையால் கொட்டிக்கொண்டே, மறு கையால் தொடர்ந்து கிளறவும். நன்றாக மாவு வெந்ததும், இறக்கிவிடவும்.



மாவு சிறிது ஆறியபின், வாழை இலையில் லேசாக எண்ணெய் தடவி, அதில் மாவை சிறிது சிறிதாக உருட்டி வைத்து ஒவ்வொரு அடையாக தட்டியெடுக்கவும். பின்னர் இட்லிப் பாத்திரத்தில் வைத்து, வேகவிடவேண்டும்.

இப்போது வெல்ல அடை தயாராகி விட்டது. இந்தியாவில் காரடையான் என்ற சாவித்திரி விரதத்திற்கு சிறந்த பிரசாதம் இது.

**(உப்பு அடை செய்யும் முறை அடுத்த இதழில் ..)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான
ஆனிமாதத்திலே ..

# குருவை துதிக்கும் மாதம் .. ஆனி



முதுவேனிற் காலத்தின் உக்கிரமான காலம் என்று அஞ்சப்படும் ஆனி மாதம் வந்து விட்டது ..

இந்தியாவில் கோடை வெயில் இம்மாதத்தில் பிளந்து தள்ளும். அதனால் அங்கே பாடசாலைகளுக்கு இம்மாதத்தில் இரண்டு மாதம்கூட விடுமுறை கொடுக்கப்படுகிறதாம்.

சிவபெருமானுடைய திருமணத்தால் பங்குனி உத்தரம் சிறப்பு பெற்றது. சிதம்பரம் நடராஜரின் உற்சவத்தினால் இந்த ஆனி உத்தரம் சிறப்பு பெறுகிறது. அது மட்டுமா? ஆனிமாதம் இன்னும் பல சிறப்புகளை கொண்ட மாதமென்பதால், நாமும் தெரிந்துகொண்டு பயன் பெற வேண்டியது முக்கியம்.

சிம்ம, கன்னி ராசிக்காரர்களுக்குறிய நட்சத்திரங்கள் வசிக்கும் மண்டலம்தான் உத்தரம்.

நமது பண்டிகைகளில் குருவுக்கென்றும் ஒன்று உண்டு. இது நம் முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த குரு பூர்ணிமை ஆஷாட (ஆனி, அல்லது ஆடி) மாதத்தில் வருகின்றதால் வியாச பூர்ணிமை என்றும் கூறுவர்..

வேதாந்த, சூத்திரங்களின் தந்தை வியாச பகவானை அன்று பூஜிப்பார்கள். நம் நாட்டில் பெரும்பாலும் முதுநிலை சந்நியாசிகள் மாத்திரமே இதனை செய்து வருகிறார்கள். தங்கள் வித்யா குருவை வணங்கி, அவர்களுக்குப் பாத பூஜை நடத்துவது, வட இந்தியாவில் இருந்து வரும் வழக்கமாகும்.

மழைக்காலத்தின் ஆரம்ப வாயில் இந்த மாதம் என்பதால், சந்நியாசிகள் தொடர்ந்து நான்கு மாதங்கள் ஒரே இடத்தில் தங்கியிருப்பார்கள் என்ற நியதி இருக்கிறது. சாதுர்மாதம் என்பது, குருபூர்ணிமைநாள் முதற்கொண்டுதான் ஆரம்பமாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹிம்சையைச் சொல்லித்தரும் ஆனிமாதம் ..!

# அற்புதமான ஆனிமாதத்திலே ..


# வேனில்

நான்கு மாதங்கள் சந்நியாசிகள் ஒரே இடத்தில் தங்கியிருப்பதற்கான காரணம், நம் சமயம் போதிக்கின்ற கருணைதான். இக்காலத்தில் தாம் கால் நடையாக யாத்திரை செய்யும்போது, பூச்சி முதலிய அப்பாவி ஐந்துக்கள் பாதங்களில் சிக்கி மரணமடையக்கூடாது என்றும், ஜீவ ஹிம்சையை தவிர்ப்பது முக்கியமென்பதை உணர்த்தவும் இதை மேற்கொள்கிறார்கள். நான்கு மாதங்களையும் நான்கு பட்ஷங்களாக கருதி, இந்த ஆஷா பூர்ணிமையில் தொடர்ந்து ஒரே ஊரில் சாதுக்கள் தங்குவதன்மூலம் இந்த ஆனி மாதத்தின் சிறப்பை அறியலாம்.

## பெற்றோரை மதிக்கும் மாதம் ..!

அன்னை, பிதா ஆகியவர்களே முதலாவது தெய்வங்கள். மூன்றாவது தெய்வமாக போற்றப்பட வேண்டியவர் குரு. அன்பை தாயும், உடலை தந்தையும், அறிவை ஆசிரியரும் போஷிப்பதால் முதலில் வழிபடத்தக்கவர்கள் இவர்களாகிறார்கள்.

இதனை திருமூலரும் தமது திருவாக்கில் சுவைகொட்டும் தமிழில் எழுதியிருக்கிறார். இம்மாதத்தில் வருகின்ற சாதுர்மாச விரதம் குடும்பத்தவர்கள், துறவிகள் எல்லோருமே அனுஷ்டிக்கத்தக்கது. இந்த நான்கு மாதங்களிலும் பகவான் யோக நித்திரை புரிகின்றார். நான்காவது மாத மூடிவில் அவர் விழித்துக்கொள்கிறார். இதனால், இவ்விரதம் ஆரம்பிக்கும் தினமான ஏகாதசி 'சயன ஏகாதசி' என்றும், முடிவடையும் துவாதசி 'பிரபோத துவாதசி' என்றும் போற்றப்படுகின்றது.



## ஆசிரியரே தெய்வம் ..!

எந்த கலைகளும் தெரிந்திருந்தாலும்கூட, குரு ஒருவரிடமிருந்து உபதேசம்பெற்று அதை கற்பதில்தான் பலனிருக்கிறது. எந்த வல்லவரும் தமது உண்மைச் சொருபத்தை அறிந்தவராகார். ஒரு குருவை சரணடைந்து போதனை பெறும்போது மட்டுமே அது சாத்தியமாகிறது. குருவிடம் பக்தி செலுத்தி பணிபுரியும்போது, அவர் கற்றுத்தராதவைகள் கூட மாணவனுக்கு கிடைத்துவிடுகிறது.

குருவின் மனதில் இடம்பெற்றுவிட்டால் முக்கால்வாசி கல்வி கிடைத்த மாதிரி. இதைத்தான் குருகுலவாசம் என்பர். சகலமும் கற்றிருந்தும், ஆதிசங்கரர் தனக்கென ஒரு குருவை நாடி நர்மதா தீரம் சென்றார். கீதாசிரியரான ஸ்ரீகிருஷ்ணர் சாந்தீப முனிவரிடம் சீடனாக வித்தைகள் கற்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருஷ்ண பரமாத்மாவின் திரு அவதாரம் இரண்டு நோக்கங்களை இப்பூமியிலே கொண்டதாக இருந்தது. துஷ்டநிக்கிர, சிஷ்டபரிபாலனம் செய்தல் ஒன்று. கலியுக மக்களுக்கு பயன் படதக்க கீதையை தருதல் மற்றொன்று.

அர்ச்சுனனுடைய கலக்க நிலையை எதிர்பார்த்து, அந்த தருணத்தை கீதைக்கான அறிமுகத்திற்கு பயன்படுத்தினார். இந்த யுகத்தில் வாழும் அனைத்து மக்களுக்காகவும் கீதை அர்ச்சுனன்மூலம் வழங்கப்பட்டது.

''நான் ரிஷிகளிலே வியாச மகரிஷியாக இருக்கிறேன் ..'' என்பது கண்ணன் கீதையில் கூறிய செய்தி. ஆகவே, வியாச பகவானுக்கு செய்யும் பூஜை கண்ணனுக்கே போய்ச் சேர்கிறது.

குருவை வணங்குவதிலும் மூன்று தலை முறைகளை சேர்த்து வணங்குதல் நியதியாம். குரு, பரமகுரு,பரமேஷ்டிகுரு என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர். குருவின் பரம்பரையை அறிந்துகொண்டு வழிபடும்போது, அவர்களின் அனுக்கிரகமும் கிடைக்கிறது.

எந்த வித்தைகளுக்கும் எல்லை இல்லை. எந்த குருவுக்கும் குரு உண்டு. ஜனகர் முதலான நால்வரை மிஞ்சியவர்களை தேடமுடியாது. வேதங்கள். ஆகமங்கள், புராணங்கள் உட்பட அறுபத்து நான்கு கலை ஞானங்களையும் அறிந்தவர்கள். அப்படியானவர்களுக்கே சந்தேகம் வரும்போது அவர்களுக்கும் குரு தேவைப்படுகிறார். அவரே சிவகுருவாகிய சிவபெருமான். கற்றோர் ஐயங்களையும் அவரே தீர்ப்பவர். 'எல்லாம் கற்றிருந்தும் என்ன பயன், நமக்கும் சந்தேகங்கள் வருகின்றனவே' என்ற நிலையில் பெருமானை நாடி, ஓடிவருவார்கள் இந்த நால்வரும்.



## அற்புதமான ஆனிமாதத்திலே ..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபூர்ணிமை தமிழகத்தில் காமகோடி மடத்தில் மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. இப்பூஜைக்கென்றே தனி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு, அதில் அட்சதை பரப்பிய பீடத்தில் கிருஷ்ண விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். சுற்றிலும் தேவதைகளையும், ரிஷிகளையும் குரு பரம்பரையிலே வந்த ஆசாரியர்களையும் வைத்திருக்கிறார்கள்.

ருத்திராட்ஷங்களிலும், எலுமிச்சம்பழங்களிலும் ஆவாஹனம் செய்து, அவர்கள் யாவருக்கும் தனித்தனியே பூஜைகள் நடக்கும்.

குருபூர்ணிமையில் வியாசரை உத்தேசித்து முக்கிய பூஜைகள் செய்யப்படுகின்றன. துவாபர யுகத்தின் முடிவில், அதாவது கலியுகத்தின் ஆரம்பத்தில் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் வியாச மகரிஷி வேதத்தை நானாக வகுத்தார். உத்தர மீமாம்சை, பதினெண் புராணங்கள், பாரதம் முதலியவைகளை யாத்தவர் அவரே.

இதுபோல, 1180 பிரிவாக அவர் வேதங்களை வகுத்தார். வேதம் முழுவதையும் அத்யயனம் செய்வதென்பது முடியாத காரியம். ஒரு மனிதன் எவ்வளவு பாகத்தை அத்யயனம் செய்து, சிரயேஸ்ஸை செய்துகொள்ள முடியுமோ அவ்வளவையும் ஒரு பிரிவாக வகுத்து வைத்தார்.


1180 பிரிவுகளில் இப்போது எட்டு மட்டுமே இருப்பதாக தெரிகிறது.



அற்புதமான ஆனிமாதத்திலே ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### சமயச் செய்திகள் ..

# மயானப் புனரமைப்பு



## புனிதமாகிவிட்டது .. ஈசனின் உறைவிடம் !

மன்னார் நகரின் இந்து மயானம் பெரும் முயற்சிகளோடு புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த மயானத்தைப் பொறுத்தவரை கவனிக்க ஆளில்லாத ஒரு இடமாகவே இதுவரையில் புறக்கணிக்கப்பட்டிருந்தது. நகரின் புறப்பகுதியில் இது இருந்ததால் யாரும் இதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அதோடு, சகோதர கிறிஸ்தவ சேமக்காலையின் பரந்த நிலப்பகுதியில் இந்து மயானம் சிறிய இடத்திலேயே இருந்தது. புனர் நிர்மாணங்களோடு எல்லைகள் விரிவடையும் இந்நேரத்தில் மயானப்பகுதியும் நகரின் மத்திய இடத்திற்கு வந்துவிட்டது. கவனிப்பாரற்று அவமதிக்கப்பட்டு வந்த மயானம், அசிங்கமான காட்சிப் பொருளாக மாறிவிட்டதைத் தொடர்ந்து பலரின் கண்களும் திறந்தன. உலகாளும் ஈசனின் புனித வாசஸ்தலமான மயான பூமியின் கதியைப் பார்த்து கண் கலங்கினர் மக்கள். ஆன்மாவை பிரிந்து, அக்கினியை தழுவும் புனிதமான பூதவுடலுக்குத் தரவேண்டிய பெரும் மதிப்பை புரிந்தனர்.

பிறகென்ன, எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு மயானத்தைச் சுத்தப்படுத்தும் வேலையில் தீவிரமாக இறங்கினார்கள் மன்னார்வாழ் இந்துக்கள்.
குப்பைகள் அகற்றப்பட்டு, புதிய தளங்கள், தகன மேடைகள் அமைக்கப்பட்டன. இந்து மயானத்திற்குறிய எல்லைகள் அமைக்கப்பட்டு, புதிய வேலிகளோடு, வாயில்களும் திறக்கப்பட்டன.

இப்போது மன்னார் இந்து மயானம் தூய்மை பெற்று, சிறப்போடு காட்சியளிக்கிறது. இந்துக்களின் புனித அந்திம பூமியாக கௌரவம் பெற்றுவிட்டது. இந்து மக்களின் இந்த தேவையில் எல்லா வகையிலும் கைகொடுத்த மன்னார் நகர சபையினரின் உதவிகள் என்றுமே மறக்கமுடியாதது. பணிவோடு நன்றி கூர்கிறோம் ..

**'எம் மயானத்தைப் புனரமைப்போம் ..'** என்ற உணர்வோடு எந்த பேதமும் இல்லாமல் அத்தனை இந்துக்களும் கொளுத்தும் வெயிலில் உழைத்தனர். பெருஞ்சிறப்பு என்னவென்றால், ஆகம கைங்கர்யங்களையும் நிறுத்திவிட்டு அந்தண குலத்தோர்களும் பொது மக்களோடு மயான புனரமைப்பில் இணைந்ததுதான். சொல்லப்போனால், ''சிறு அளவில் தொடக்கப்பட்ட அந்த வேலையை பெரும் வளங்களைக் கொண்டுவந்து நேர்த்தியாக முடித்து வைத்தது, **மன்னார் இந்துக் குருமார் பேரவைதான் ..** " என்று மகிழ்ந்து போகிறார்கள் சைவ மக்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளிக்கிழமை விரதம் ..



**வா**ராவாரம் _ வந்துபோவதால் வெள்ளிக்கிழமை என்பது சாதாரண மாகிவிட்டது. மறக்கறி உணவும், கோயிலும் என்ற கடமைகளோடு அந்த நாளை வழியனுப்பி விடுகிறோம்.

எல்லோருக்குமே தெரியவராத அபூர்வ சக்திகள் வெள்ளிக்கிழமைக்கு உண்டு. அதிலும் சைவ சமயிகளுக்கே அதை அதிகளவில் அனுபவிக்கும் வாய்ப்பும் உண்டு.

இந்த நாளில் பிடிக்கும் விரதம் மகாலட்சுமியாலேயே முதலில் தொடக்கி வைக்கப்பட்டது தெரியுமா? ..

ஒரு சமயம் மகாவிஷ்ணு தனது பாம்பணைமீது வைகுண்டத்தில் ஓய்வில் இருந்தார். அவரின் காலடியில் அமர்ந்து பாதங்களை பிடித்துவிட்டுக் கொண்டிருந்த மகாலட்சுமிக்கு ஒரு சந்தேகம் தோன்றியது.

''பிரபு, மனிதர்கள் எல்லோரும் சமம்தானே! பிறகு எதற்காக அவர்களின் நிலைமைகள் ஏற்ற தாழ்வுகளை கொண்டிருக்கின்றன ..'' என்று கணவரிடம் விளக்கம் கேட்டார்.

''எல்லோரும் _ சமமெனினும், விதிப்பயனுக்கேற்று வாழ்க்கை அமைந்து விடுகிறது. அதேநேரம், நல்ல வழிகளில் சிந்தித்து, நன்மைகள் புரிந்தால் சகலருக்கும் பாக்கியங்கள் கிட்டவும் வாய்ப்புண்டு ..'' என்றார் நாராயணன்.

லட்சுமிதேவி விடவில்லை.


'' அப்படியென்றால், நன்மைக்கான வழிமுறைகளுக்கு வாய்ப்பு தருவதும் நம் கடமைதானே ..? '' என்று கேட்டாள்.

மகாவிஷ்ணு புன்னகையோடு கூறினார் ..''அது முடியாது. ஒருவருக்கு சகலமும் கிடைக்கவேண்டுமானால், முதலில் லட்சுமி கடாட்சம் பெறவேண்டும். அதை பெறுவதற்கு சில விடயங்களை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் .. அது என்னவென்பதை மகாலட்சுமியாகிய நீயே நேரில் சென்று தெரிந்து வா ..'' என்று தன் மனைவியை பூலோகத்திற்கு அனுப்பி வைத்தார் வைகுந்த வாசன்.

அற்புதமான ஆனிமாதத்திலே ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வீட்டை மெதுவாக நெருங்கி உள்ளே எட்டிப்பார்த்தார். வாசலைப்போலவே வீட்டின் உட்புறங்களும் பளிச்சிட்டன. அறைகளும், பொருட்களும் வெகு தூய்மையாக இருந்தன.

தான் வாசம் புரிவதற்கேற்ற இடம் இதுதான் என்று தீர்மானித்து விட்டார் லட்சுமி. அந்த வீட்டின் தலைவியின் பெயர் சோமதேவம்மா. அவளின் கணவர் பிட்சை எடுத்துக்கொண்டு வருவதை வைத்து குடும்பத்தை நடத்திக்கொண்டிருந்தாள்.

தான் யார் என்பதை காட்டிக்கொள்ளாமல் சாதாரண தோற்றத்தில் வாசலில் நின்றவாறே குரல் கொடுத்தார் மகாலட்சுமி. வெளியே வந்த சோமதேவம்மா வரவேற்று உபசரித்தாள். பிட்சைக்குப் போயிருக்கும் தனது கணவர் வந்ததும் உணவு தயாரித்து தருவதாக கூறினாள்.

மகாலட்சுமிக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. அவ்வளவு வறுமையிலும்'எதுவும் இல்லை'யென்று சொல்லாமல் உபசரிக்கும் தேவம்மாவுக்கு அருள் புரிய விரும்பினார்.

தான் வாசம் செய்வதற்கான இடத் தை அறியவும், அப்படியான இடத்திற்கு ஆசி வழங்கவுமே தன்னை கணவர்
பூமிக்கு அனுப்புகிறார் என்று பரிந்து கொண்டார் மகாலட்சுமி.

எல்லா வீடுகளுமே தான் வசிக்கக் கூடியதுதான் என்று எதிர்பார்த்து பூலோ கம் வந்த தேவிக்கு பலத்த ஏமாற்றம்.

விடிந்து ரொம்ப நேரமாகியும் பெருக்காமல், நீர் தெளிக்காமல் கிடந்த வீடுகளை பார்த்தார். குப்பையும், கூளமு மாக காட்சியளித்த வாசல்களைக் கடந்து உள்ளே செல்லவே லட்சுமிக்குப் பிடிக்கவில்லை..

ரொம்பவும் வருத்தம் மேலிட, தெருவில் நடந்துகொண்டிருந்தபோது தேவியின் கண்ணில் ஒரு வீடு வித்தி யாசமாக தென்பட்டது.

பார்க்கவே அந்த ஏழையின் வீடு கண்ணைப்பறித்தது. சாணி தெளிக்கப்பட்டு, அழகிய கோலங்கள் செம்மண்ணின்மீது போடப்பட்டிருந்தன. இதைப்பார்த்த மகாலட்சுமிக்கு ஆனந்தம் தாங்கவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் வாசம் பண்ணும் இடத்தில் சகல ஐஸ்வர்யங்களும் வந்தே தீரும் என்று லட்சுமிக்கு தெரியும். ஆனாலும் எந்த முயற்சியும் இல்லாமல் கடவுள் அருளால் மட்டுமே கிடைக்கிற பொருளுக்கு மதிப்பில்லாமல் போய்விடுமென்பதால், என்ன செய்யலாம் என்று யோசித்தார் மகா லட்சுமி. அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.




வெள்ளிக்கிழமை விரதம் இருப்பது எப்படி என்பதை சோமதேவம்மாவுக்கு கற்றுத்தந்து, அதன் பயனாக வருகிறவாறு உதவி செய்ய முடிவெடுத்தார்.

அதுபோலவே விரதத்தை அவளுக்கு சொல்லிக்கொடுத்தார். பூஜைக்கு வருகின்ற சுமங்கலியாக தானே நின்று, தேவம்மா கையால் தாம்பூலம், குங்குமம் எல்லாம் வாங்கிக்கொண்டார்.



பிறகு கேட்கவா வேண்டும்! சோமதேவம்மா வீட்டில் லட்சுமி கடாட்சம் நிறைந்து வழிந்தது. வெள்ளிக்கிழமை விரதத்தின் பலனை தான் மட்டும் அடைந்தால் போதுமென்று நினைக்காமல் எல்லோருக்கும் எடுத்துச்சொல்லி, பயன்பெற வைத்தாள். அதிலிருந்துதான் வெள்ளிக்கிழமை விரதம் ஆரம்பித்தது.

வெள்ளிக்கிழமை விரதம் எப்படி இருப்பதென்பதை சோமதேவம்மாவுக்கு மகாலட்சுமி எப்படி கற்றுக்கொடுத்திருப்பார்.?



ஏதாவது தமிழ் மாதத்தில் வரும் மூன்றாவது அல்லது கடைசி வெள்ளியிலேயே விரதத்தை தொடங்க வேண்டும். அன்று அதிகாலையிலேயே எழுந்து மஞ்சள் பூசிக்குளிக்க வேண்டும். மங்களகரமாய் குங்குமம் இட்டுக்கொண்டு, வாசலில் பசுஞ்சாணம் தெளித்து, கோலம் போட்டு, செம்மண் இடவேண்டும்.

வீட்டை முழுமையாக பெருக்கி, தூய்மையாக்கிவிட்டு, பூஜையறையில் சுவாமி படத்திற்கு முன்னாலும் அழகாக கோலமிட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முடிந்த அளவுக்கு நைவேத்தியம் படைத்து, கற்பூர ஆரத்தி காட்டி வணங்க வேண்டும். இயலுமானால் சுமங்கலிகளை அழைத்து வெற்றிலை, பாக்கு, பழம், பூ, மஞ்சள், குங்குமம், தட்சிணை வைத்துக்கொடுக்கலாம்.

இப்படி தொடர்ந்து பதினொரு வாரம் விரதம் இருக்கவேண்டும். பதினோராவது வெள்ளியன்று ஐந்து சுமங்கலிகளுக்கு விருந்துபசாரம் தந்து, மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழம், பூ, தட்சிணை முதலியவற்றோடு ரவிக்கைத்துணி (முடிந்தவர்கள் சேலையும்) கொடுத்து விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

இவ்விரதத்தை கடைப்பிடிப்பவர்கள் வீட்டில் லட்சுமிதேவி நீங்காமல் வாசம் புரிவாள் என்பது ஐதீகம். கூடவே, மகாலட்சுமியின் அருளால், விரதத்தின் பயனால் வேண்டிய எல்லாமே கிடைக்கும். சௌபாக்கியங்களும், சிறப்புகளும் பெருகும் என்றும் புராணம் சொல்கிறது.

பதினொரு வாரங்கள் மட்டுமன்றி தொடர்ந்து வரும் வெள்ளிகளிலும் இதனை கடைப்பிடிக்கலாம். பல வீடுகளில் பரம்பரையாக தொடர்ந்து இதனை பின்பற்றுகிறார்கள். புண்ணிய காரியத்திற்கு எல்லை ஏது?

பின்னர் தீபமேற்றி, ஊதுவத்தி - சாம்பிராணி மூலமாக புகை காட்டவும். வாசலில் மாவிலை கட்டியும் அழகு படுத்தலாம். மொத்தத்தில் வீடு என்பது 'பளிச்' சென்று இருக்கவேண்டும்.

சாதாரணமாய் பாலும், பலமும் சாப்பிட்டுவிட்டு அன்று முழுவதும் உபவாசம் இருக்கலாம். முடியாதவர்கள் பகல் ஒருவேளை மட்டும் உணவு எடுக்கலாம்..

இதைத்தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு வெள்ளியும் இவ்வாறே விரதம் இருக்கவேண்டும். முழுநாளும் தெய்வ சிந்தையுடன் இருக்கவேண்டும். தெரிந்த அம்பாள் சுலோகங்களை வாய்விட்டு சொல்ல வேண்டும். நேரம் கிடைத்தால் அருகிலிருக்கும் கோவில்களுக்கு சென்று வருதல் சிறந்தது. முருகன், அம்பாள் கோயில்களில் வணங்குதல் இன்னும் சிறப்பானது.




வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்கும், முருகனுக்கும் உகந்த தினமாகும்.

வெள்ளிக்கிழமை மாலையில் வீட்டில் சுவாமி படங்களுக்கு பூஜை செய்யவேண்டும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்சவம் கண்ட ஊர்த் தலங்கள்!!



## திருக்கேதீஸ்வரர் மகோற்சவம் ..

திருக்கேதீச்சர நாதருக்கு மகோற்சவம் என்றாலே மேகங்களும் கூட்டமாக வந்து சூழ்ந்து நிற்கும். வனத்திலிருந்து பறவைகளும், விலங்குகளும் எட்டிப்பார்க்கும். பூமரங்களும், வாழைகளும் ஈசனுக்கென்று உற்சாகமாக செழித்து தயாராகி விடும். . அப்படியொரு அன்பினால் அணைக்கின்றவர் இந்த கௌரி மணாளர். அவரின் மகோற்சவத்தில் மாந்தைக் கரையோரத்தை கடலலைகள்கூட மகிழ்ச்சியாக தொடும்போது ‘அரோகரா’ ஒலி கேட்குமே ..., அப்படியிருக்க பக்தர்களின் பரவசத்துக்கு கேட்கவா வேண்டும் ..!

திருக்கேதீஸ்வரப் பெரும் ஆலய மகோற்சவம் இம்முறையும் மகா சிறப்பாக நடந்து மனங்களை நிறைத்தது. எந்நாட்டவர்க்கும் இறைவனாக இத் தலமதில் நிலைத்து அருள்கின்ற இறைவனுக்கு எக் குறையும் வைக்காமல் உற்சவம் தந்து மகிழ்வித்தனர் அடியார்கள்.

வைகாசி 24ந திகதி மூத்த கணபதியின் ஆசிவேண்டி ஆரம்பமான பூஜைகளோடு, மகோற்சவத்தின் வழமையான கிரியைகள் தொடங்கின. மறுதினம், முதல்நாள் நிகழ்வாகிய திருக்கொடியேற்றப்பெரு விழா நடந்தது. தொடர்ந்த உற்சவ கால விஷேட நிகழ்வுகளும், பூஜை, அபிஷேகங்களும் சொல்லொணா ஆனந்தத்தில் அடியார்களை வைத்திருந்தன.

காலைப் பூசை, வசந்த மண்டப அலங்கார பூசை, பஞ்ச மூர்த்திகளின் வீதியுலா, மாலைப் பூசை, கொடித்தம்ப பூசை என்று எங்கெனும் சிவமயம்தான். கருத்தாக வேதம்பொழிந்து, ஐயனை குளிர்வித்த அந்தண சிஷேடர்களால் திருக்கோயில் பதின்மூன்று நாட்களும் திருக்கைலாயமாகவே தோன்றியது.

ஆலய நிர்வாகத்தின் உற்சவ ஒழுங்கமைப்பும், தொண்டர்களின் பங்களிப்பும் அடியார்களை பெருமானுடன் ஒன்றிணைக்க பெரிதும் உதவின.

பாலாவிக்கரையில் நீராடி, பாடல் பெற்ற தலத்தில் இறையை அனுபவித்து, அடியார் மடங்களில் அன்னமருந்தி வீடு திரும்பும் பெரும் பாக்கியம் காத்திருக்கிறது இங்கே. தாமதிக்காமல் வந்து மோட்ஷம் பதிவு செய்யுங்கள் ..

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் மகோற்சவம் ..



காட்டாஸ்பத்திரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ..!

வருடம் தவராமல் அலங்கார உற்சவத்தில் எழுந்தருளி அருள்மழை பொழிவது இந்த அம்மனின் தனிச்சிறப்பு. பெயரைப்போலவே முத்தான புன்னகையோடு தலம்நிறைந்து தரிசனம் தரும் இந்த தாய்க்கு, விழா எடுப்பதென்றால், கிராமமே சுறுசுறுப்பாகி விடுகிறது. சுற்றிலும் ஏகப்பட்ட அடியார் உறவுகளை அணைத்தபடி கிராமத்தின் காவல் தெய்வமாக விளங்கி வரும் அம்மனுக்கு வழமையைவிடச் சிறப்பாகவே இந்தமுறை உற்சவம் நடத்தி அசத்திவிட்டார்கள் ஊர்மக்கள்.

வைகாசி 24ந திகதியன்று தல முதல்வர் விநாயகரை வழிபட்டு, அவரின் ஆசியுடன் மறுநாள் ஆரம்பமான உற்சவம், ஆனி மாதத்திலும் கால் பதித்து பதினொரு நாட்கள் தொடர்ந்தது. வழக்கமான நித்திய பூஜைகளோடு மட்டுமே அம்பாளை தரிசிக்கும் ஊர்மக்களுக்கு இந்த உற்சவ காலம் வந்துவிட்டால் ஆனந்தம் கரைபுரண்டோடும். அந்த அளவுக்கு விஷேட புஜைகளும், அபிஷேகங்களும் பக்தி சொட்ட நடக்கும். கூடவே, நாளொரு அலங்காரத்தில் பல்லக்கேறி வீதியுலா வரும் காட்சியும், நாளாந்த உபயக்காரர்களின் பக்தி மயமான பங்களிப்பும் நெகிழ வைக்கின்ற விஷயங்கள்!. முழுக்கிராமத்தையும் பக்தியில் மூழ்கடிக்கும் அம்மனின் கடாட்சம் இம்முறையும் பெருமளவில் மக்களுக்கு கிடைத்தது. அபிஷேக பூஜைகளும், தேவியின் உள்வீதி உலாவும், அஷ்டோத்திர சங்காபிஷேகமும் வெகு நேர்த்தி. கூடவே, மூலஸ்தான இரவு பூஜையோடு கிடைத்த அம்பிகையின் வசந்த மண்டப கிராம பிரதட்சனம் அழகோ அழகு! உதவிக்குருக்கள் அணி சேர, சகல உற்சவ கிருத்தியங்களையும் நேரந் தப்பாமல் நடத்தி முடித்தார் உற்சவ குருவான பிரம்மஸ்ரீ, மகாஸ்ரீ தர்மகுமார சர்மா அவர்கள். என்னே சக்தியின் பெருமை!

நெடுநாள் உற்சவத்தில் சகல ஜீவ ராசிகளுக்கும் அருள்மழை பொழிந்த திருப்தியில், இப்போது அழகாக ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறாள் அம்பிகை ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீமத் பகவத்கீதை 02

## --பாரதியார் உரை--

தொகுத்து, தொடராக தருபவர் வை. கிருச்செல்வம்



... அப்பால் சங்குகளும், பேரிகைகளும், தம்பட்டங்களும், பறைகளும், கொம்புகளும் திடீரென ஒலித்தன. அ·்து பேரோசையாயிற்று. 13

பின்பு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய பெருந் தேரில் நின்ற மாதவனும், பார்த்தனும் (தம்முடைய) தேவச் சங்குகளை ஊதினர். 14

கண்ணன் பாஞ்சஜன்யத்தை யூதினான். தேவ தத்தன் என்ற சங்கை தனஞ்சயன் ஒலித்தான். அஞ்சுவதற்குரிய செயல்களையுடைய ஓநாய் வயிற்று வீமன் பௌண்ட்ரம் என்ற பெருஞ்சங்கை யூதினான். 15

குந்தி மகனாகிய யுதிஷ்டிர ராஜன் அநந்த விஜயம் என்ற சங்கையும், நகுலனும் சகாதேவனும் முறையே சுகோஷம், மணி புஷ்பகம் என்ற சங்குகளையும் ஊதினர். 16

வில்லாளிகளில் மிகச்சிறந்த காசி ராஜனும், மகாரதனாகிய சிகண்டியும், திருஷ்டத்யுந்நனும், விராடனும், வெல்லப்படாத ஸாத்தியகியும், 17

துர்பதனும், துரோபதை மக்களும், பெருந்தோளுடையவனாகிய சுபத்திரை மகனும், தனித்தனியே தத்தம் சங்குகளை ஒலித்தனர்.

பூமிக்குத் தலைவனே! ( திருதராஷ்டிரனை விளித்து, இவ்வாறு சஞ்சயன் சொல்லிக் கொண்டிருக்கிறான்) 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்தப்பெரு முழக்கம் வானையும், மண்ணையும் உடனொலிக்கச் செய்வதாய் திருதராஷ்டிரக் கூட்டத்தாரின் நெஞ்சுகளைப் பிளந்தது. 19

அப்பால், இரு திறத்தும் அம்புகள் பறக்கத் தலைப்பட்டன. அப்போது குரங்குக் கொடியுயர்த்த, பார்த்தன் திருதராஷ்டிரக் கூட்டத்தாரை நோக்கி வில்லையேந்திக் கொண்டு, 20

கண்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான் ..:



**அர்ஜுனன் சொல்லுகிறான் :-**

''அச்சுதா, படைகளிரண்டுக்கும் நடுவே என் தேரைக்கொண்டு நிறுத்துக ..'' என்று.
(கேளாய், திருதராஷ்டிர ராஜனே!) 21

''சமரை விரும்பி நிற்கும் இவர்களை நான் பார்க்கவேண்டும். இந்தப் போர்த் தொடக்கத்தில் என்னோடு போர் செய்யக் கடவோர் யாவர்?'' 22

''கெட்ட மதிகொண்ட துரியோதனனுக்குப் ப்ரீதி செய்யும் வண்ணம், இங்கு போர் செய்யத் திரண்டு நிற்போரை நான் காணவேண்டும்.'' என்றான்
(சஞ்சயன் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறான்)
23



கேளாய் பரத நாட்டரசே, இங்கனம் பார்த்தன் உரைத்தது கேட்ட கண்ணன் மிகவும் மேன்மை கொண்ட அத் தேரை இரண்டு படைகளுக்குமிடையே கொண்டு நிறுத்தினான். 24

பீஷ்மனுக்கும், துரோணனுக்கும் மற்றெல்லா வேந்தருக்குமிடையே தேரை நிறுத்திக்கொண்டு, ''பார்த்தா, இங்கு கூடி நிற்கும் கௌரவரைப் பார்'' என்றான். 25

அங்கு பார்த்தன் தன்னுடைய தந்தையரும், பாட்டன்மாறும், குருக்களும், மாதுலரும், அண்ணன் தம்பிகளும், மக்களும், பேரரும், தோழர்களும் நிற்பதைக் கண்டான். 26


(தொடர்ந்து வரும் ..., மெய்சிலிர்க்க வைக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியானத்தில் இருப்பதுதான் தட்சிணாமூர்த்திக்கு மிகவும் பிடிக்கும். எல்லா சிவத்தலங்களிலும் அநேகமாக இப்படித்தான் ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெரிந்து கொள்வோம்

# தட்சிணாமூர்த்தி

### கீர்த்தி தரும் மூர்த்திகள் பகுதி

சிவ பெருமானே உலக குரு. சிவாலயங்களில் தெற்கு நோக்கி அமர்ந்துகொண்டு, சின்முத்திரை காட்டியபடி சிலாரூபம் தரும் இவரே தட்சிணா மூர்த்தி..



இவரைப் பார்க்கும்போது பாலக வயதாக தெரிவதும், இவரின் சிஷ்யர்கள் நால்வரும் வயதில் முதிர்ந்தவர்களாக இருப்பதும் என்ன தெய்வீக வேடிக்கையோ ..

குரு வயதானவர்களாகவும், சிஷ்யர்கள் வாலிபர்களாகவுமே எங்கேயும் இருப்பதுண்டு. ஆனால் இங்கோ குரு வாலிபராக இருக்கிறார். அது மட்டுமல்ல, எந்த வார்த்தையும் பேசாமல் தனது சின்முத்திரை மூலமாகவே சிஷ்யர்களின் சகல சந்தேகங்களையும் போக்கிக்கொண்டிருக்கிறார் ..

எல்லா வேதங்களின் அர்த்தங்களும் இந்த சின்முத்திரையில் தெரிவிக்கப்படுகிறது. பரம்பொருளும், நமது அறிவும் ஒரே வஸ்துதான் என்பதை மட்டும் நாம் கண்டுவிட்டால் ...!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகருக்கு குருவாக விளங்கி, திருப்பெருந்துறையில் போதித்த சிவபிரானே பின்னர், சுவாமி மலையில் தன் குமாரன் முருகனிடம் சீடனாக அமர்ந்து உபதேசம் பெறுகிறார்.

என்னே திருவிளையாட்டு ..!


சிவன் கோவில் சென்று வழிபடும் அடியார்கள் யாவருமே தியானத்தில் இருக்கும் தட்சனா மூர்த்தியை காணலாம். தமிழகத்தில் மாயவரம் வள்ளலார் கோயிலில் தட்சனா மூர்த்திக்கென்று தனியாக சந்நதி உள்ளதாம்.

## சின்முத்திரையின் சிறப்பு .. கட்டைவிரலில் சிவம் ..!!

சிவலிங்க உருவம் நமது கட்டை விரலில் இருப்பதை பார்க்கிறோம் அல்லவா? அதில் சிவம் இருக்கிறது. அந்த விரல் இல்லாவிட்டால், மற்ற நான்கு விரல்களாலும் பயனில்லை. அதுபோலவே சிவபெருமான் இல்லாத உலகில் எந்த கருமமும் நடந்தேறாது என்பதை இந்த கட்டைவிரல் உணர்த்துகிறது.

ஆள்காட்டி விரல் உயிர். அதோடு சேர்ந்திருக்கும் ஏனைய மூன்று விரல்களும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் குறிக்கிறது. உயிராகிய ஆள்காட்டி விரலுடன் மற்றைய மூன்று விரல்களும் சேர்ந்திருப்பதைப் போல, நம் உயிருடன் மூன்று மலங்களும் ஆதிகாலத்தில் இருந்தே சேர்ந்திருக்கின்றன.

ஆள்காட்டி விரல் வளைந்து வந்து கட்டை விரலைத் தொட்டுக்கொண்டிருப்பதே சின்முத்திரை. மும்மலங்களையும் உதறி எறிந்துவிட்டு, உயிரானது இறைவனின் பாதாரவிந்தங்களை சரணடைய வேண்டுமென்பதே இதன் தத்துவம். இதனையே ஈசன், தட்சணாமூர்த்தி வடிவில் ஜனகர் முதலான நால்வருக்கும் சின்முத்திரையினால் உணர்த்தி அருளினார்.



ஜனகர் உள்ளிட்ட அந்த நால்வரும் சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள். அவர்களை விடக் கற்றவர்களை உலகில் எங்குமே தேட முடியாது.

அப்படிப்பட்டவர்களுக்கே சந்தேகம் வரும்போது, அதனை யாரால் தீர்க்க முடியும்? சிவபிரான் ஒருவராலேயே அது இயலும்.

‘‘நாங்கள் இத்தனையும் கற்றிருந்தும் பயனில்லையே ..! இது ஏன் ? ..” என்று ஏற்பட்ட சந்தேகமே அவர்களை சிவபெருமானிடம் கொண்டுவந்து சேர்த்தது. இறைவனும் அவர்களுக்கு உதவ ஆயத்தமானார்.

அதற்கேற்ற திருக்கோலம் கொண்டார். கல்லால விருட்ஷத்தை ஆசனமாக்கிக்கொண்டார்.

தென்திசையை நோக்கியவாறு அதில் அமர்ந்து, சின்முத்திரை பிடித்து அதன்மூலம் உபதேசம் புரிந்தருளினார்.

அதனால் தெட்சணா மூர்த்தி என்ற பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது. தெட்சணம் என்றால், தெற்கு என்று பொருள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீடர்கள் வல்லவரன்றோ ..!!

மௌனம்தான் பெருமானின் உபதேச மொழியாக இருந்தது. அவரது போதிப்பு எல்லாவற்றையும் உணர்த்தாமல் உணர்த்தியது. கற்பித்தலில் எவ்வித அசைவோ, ஓசையோ இருக்கவில்லை. மறுபக்கம் அதற்கு தேவையும் இருக்கவில்லை. ஏனெனில், வாய் திறவாமலேயே இறைவன் தட்சிணாமூர்த்தி உணர்த்தும் அனைத்தையுமே உணரும் விவேகம் கொண்டவர்களாக அவரின் சீடர்கள் விளங்கினார்கள். வல்லவர்களன்றோ ...

எப்பேர்ப்பட்ட அற்புதம்!

## வந்து பாருங்கள் .., பரவசியுங்கள் ..!!

இறைவன் உணர்த்தாமல் உணர்த்துவதிலும், சீடர்கள் புரியாமல் புரிதலிலும் நிகரற்று இருந்தார்கள். இன்னமும் இக்காட்சி சிவாலயங்களில் நம்மை பரவசப்படுத்த காத்திருக்கிறது. வந்து பாருங்கள். பரவசியுங்கள்.





*தட்சணா மூர்த்தி ஸ்பெஷல் இன்னும் கொஞ்சம் ..*

*எம்பெருமான் இப்பெயரோடு பல சிவத் தலங்களில் தரிசனம் தந்தாலும், பல திருக்கோலங்களில் வித்தியாசமும் காட்டி பூரிக்க வைக்கிறார் என்றும் பக்தர்கள் பெருமிதம் காட்டினர்.*

*தமிழகத்திலுள்ள பெரியாவுடையார் கோவிலில் உள்ள தட்சணாமூர்த்தி பேரழகு வாய்ந்தவராம். வைத்த கண் எடுக்காமல் பார்க்கச் செய்வாராம்.*

*யோக தட்சிணாமூர்த்தி, வீணா தட்சிணாமூர்த்தி போன்றோர் செப்பு விக்கிரகங்களில் தரிசனம் தருவார்களாம்.*

*எல்லாவித தட்சிணாமூர்த்திகளையும் பார்க்க ஆசைப்படுபவர்கள் காஞ்சியிலுள்ள கைலாச நாதர் ஆலயத்திற்கு செல்ல வேண்டுமாம்.*

*வியாழ மாற்றம், தோஷங்கள், மன உளைச்சல்கள் என்று துன்பப்படுகின்ற மக்களுக்காக ஒரு சிறப்புப் பார்வை இந்த மூர்த்தியிடம் உண்டு. எந்த வேதனையையும் அந்தப் பார்வையால் போக்கி, அந்த இடத்திலேயே சுகமும், தீர்வும் தருவார் அவர்.*

*அது கிடைக்க வேண்டுமா? அருகில் திருக்கேதீஸ்வரத்தில்கூட காத்திருக்கிறார். சென்று அனுபவியுங்கள் ..*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மூர்த் தலங்கள் ..



## ஸ்ரீ லட்சுமிநரசிம்மர்..!



**வவுனியா** பூந்தோட்டத்தில் .. கருணையும், உக்கிரமும் கலந்த திருக்கோலத்தில் மக்களை பிரியமுடன் காத்து வருகிறார், ஸ்ரீ லட்சுமி நரசிங்கர் !

காக்கும் கடவுளாகிய மகாவிஷ்ணுவின் தசாவதாரத்தில், சிறுவன் பிரகலாதனுக்காக பெருமான் எடுத்த அதிரடியான அவதாரம்தான் இவர். பக்தனை காப்பதற்காக தூணில் இருந்து ஆவேசமாகப் புறப்பட்டு வந்து உலகத்தையே கிடுகிடுக்க வைத்தவர், இப்போது சாந்தம் தவழ வவுனியா மக்களின் பக்தியில் கட்டுண்டு அமைதியாகி விட்டார். நாடி வருகின்ற மக்களுக்கு வேண்டும் வரங்களை அள்ளித் தந்துகொண்டு, அன்பையும் சொரிகிறார் ..

மூவுலகத்தையும் அஞ்சச் செய்த இந்த அவதாரத் திருக்கோலம், வவுனியா மக்களுக்கு மட்டும் எப்படி அரிய வரமாக கிடைத்தது? தனியாக தலம் அமைத்துக்கொண்டு அபூர்வ தரிசனம் தருவதற்கு இங்கு மட்டும் எப்படி விஷேசமாக நாராயணன் திருவுளம் கொண்டார்? ..

இதோ சில வரலாற்றுத் துளிகள் ..



குறிப்பிட்ட காலவரையான தகவல்களை பார்க்கும்போது, 200 வருடங்களுக்கும் மேலாக இவ்வாலயம் பூஜிக்கப்பட்டு வருவது தெரிகிறது. இதன் வழிபாட்டு முறைகள் பழங்கால மெய்சிலிர்க்கும் சடங்குகளோடு கூடிய சரித்திரமும் இருந்திருக்கிறது ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நரசிங்கர் என்ற பெயரைத் தாங்கிய இவரை முதலில் வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த ஒரு குடும்பமே பூஜை செய்து, பராமரித்து வந்திருக்கிறது. அக் குடும்பத்தின் வழித்தொடராக வந்தவர்களால் செய்யப்பட்ட இந்த இறை தொண்டு **1984**ம் ஆண்டு வரை தொடர்ந்தது.

அந்த நேரத்து பூஜை முறைகள் வெளிப்படுத்தும் பக்தியோ அற்புதமாக இருந்திருக்கிறது.

### வாழைப்பழ மடை ..

பூசையின் முக்கிய அம்சமாக விளங்கி வந்தது வாழைப்பழ மடையாகும். வேள்விகளின்போது ஆடு, மாடுகள் காணிக்கையாக தரப்பட்டு வந்தன. அக் காலத்தில் பெண்கள் இக் கோயிலுக்கு செல்லும் வழக்கம் இருக்கவில்லை.

பழங்கால முறைகளைக் கொண்டு களங்கமில்லா பக்தியின் வெளிப்பாடாக விளங்கிய பூஜை முறைகள் நாளடைவில் தற்கால ஆலய விழுமியங்களை பின் பற்ற ஆரம்பித்தது.

**1980**ம் ஆண்டில் குறிப்பிட்ட ஒரு தினத்தில், முதன் முதலாக பொங்கலிட்டு பூசையை நடத்தினார்கள். பூந்தோட்ட மக்களின் உதவியோடு, இதனைத் தொடக்கி வைத்தவர்கள், திருவாளர்கள் கனகரட்ணம், செல்லப்பா, அமரர் பத்ம நாதன், அமரர் நடராசா ஆகியோர் என்று அறிய முடிகிறது.

பின்னர் நரசிங்கப்பெருமானின் அருளால் ஈர்க்கப்பட்ட பூந்தோட்டம் இளைஞர்கள், இந்த பொங்கல் பூசையை சிறப்பாக மேலும் முன்னெடுக்கவேண்டி, முதலாவது நிர்வாக சபையை உருவாக்கினார்கள். **1984**ம் ஆண்டில் இப்படியாக ஆலய வளர்ச்சி ஆரம்பமாகியது.

வவுனியா குளத்தின் குளிர்ந்த காற்றை அனுபவித்துக்கொண்டு, வயல்வெளிகளின் ரம்மியமான சூழலில், வைரவர் சூலத்தோடு இப்போது காட்சி தரும் ஆலயத்தின் கதை இதுதான்.

இத்தி மரத்தின் கீழேயிருந்து அருள் சொரியும் இவ்வாலயத்தை சென்றடைய, வயல் வரப்புகளும், ஒற்றையடிப் பாதைகளுமே பயன் பட்டு வந்திருக்கின்றன. கடகப்பெட்டிக்குள் வாழைக்குலையை சீப்பாக வெட்டி வைத்துக்கொண்டு அன்போடு எடுத்துச் சென்று படைப்பார்களாம். விதை விதைத்து, அரிவு வெட்டியதும் நரசிங்கப்பெருமானுக்கு விஷேசமாக மடை நடக்கும். அக்காலத்தில் பூசை செய்தவர்களை பூசாரி என்று அழைத்தார்கள்.

இக்காலத்தில் ஆனி மாதத்தில் வரும் புதூர் பொங்கல் முடிவடைந்ததும், முதலில் வருகின்ற சனிக்கிழமையை தினமாக கொண்டு பொங்கல் விழா நடத்தப்படுகிறது. இத்தினத்தில் பெரும்பொங்கலோடு, இரவு முழுவதும் கலை நிகழ்ச்சிளும் களைகட்டும்.


அடியார்கள் தனியாக நேர்த்திக்கென்று பொங்கலிடுவதுடன், பெருமளவிலான ஆடுகள், கோழிகள் என்பனவும் ஆலயத்தில் விடப்படுகின்றன. இவை ஏலம் விடப்பட்டு, அப் பணம் ஆலய அபிவிருத்திக்காகப் பயன்படுகிறது. சித்திரை மாதத்தில் சித்திரைக் கஞ்சி காய்ச்சுவதும், பெருமளவு பக்தர்கள் தூர இடங்களிலிருந்து அருள்நாடி வருவதும், கலையம்சங்கோடு மெருகேறியிருக்கும் ஆலயத்தின் வளர்ச்சிகளும் பிரமிக்க வைக்கின்றன.

எங்குமில்லாதவாறு தீபாவளி தினத்தன்று இங்கு நடத்தப்படும் **நரகாசுரன் வதம்** அதி விஷேசம் கொண்டது. யுத்த காலங்களில் சிலவருட விழாக்கள் பொலிவிழந்தும் போயிருக்கிறது. மீண்டும் புது வசந்தம் கண்டுவரும் இவ்வாலயத்தில் அருள் கொட்டிக்கிடக்கிறது. எம் மாகாணத்தில் இப்படியொரு அவதாரமூர்த்தி தலமமைத்து வாசம் புரிகிறார் என்றால், நம் பாக்கியம் சொல்லவும் வேண்டுமோ ..?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சந்தேகங்கள்




**சிவபூஜை செய்யும்போதும், ஜபம் செய்யும்போதும் ருத்திராட்ச மாலையை பயன்படுத்துகிறோம். அந்த ருத்திராட்சத்தின் பெருமை என்ன?**

ருத்திரன் என்பது சிவபெருமானின் பெயர். அவரது கண்களிலிருந்தே இது தோன்றியதால் இப்பெயர் வந்தது. நல்ல ருத்திராட்சத்தை உரைத்துப்பார்த்தால், அதில், பசும்பொன்னின் பிம்பம் இருக்குமென்று சொல்வார்கள்.




**பூஜையின்போது மணி அடிப்பதற்கான பொருள் என்ன?**

மணியின் ஒலி ஓம்கார நாதம். தேவதைகளை அழைக்கும். அழிவு சக்திக்கான அசுரர்களை விரட்டவும் மணியொலி எழுப்பப்படுகிறது. பூஜையை அறிவிக்கும் ஓசையாகவும் இது விளங்கி, தூரத்திலிருப்பவர்களையும் வழிபட வைக்கிறது.



**கோயில்களுக்கு ஆலயம் என்றும் பெயருண்டு. இது எதனால்?**

'ஆ' என்பது ஆன்மாவையும், 'லயம்' என்பது லயிப்பதையும் குறிக்கும். இறைவனிடம் ஆன்மா சங்கமிப்பதை இப்படி உணரலாம். அவ்வாறே, 'கோ' என்றால் கடவுள். 'இல்' என்றால் தங்குமிடம். கடவுள் தங்கியிருக்கும் இடமாக 'கோயில்' பொருள் படுகிறது.



**வானத்தில் இடி இடிக்கும்போது, 'அர்ஜுனா' என்று அழைக்கிறார்கள். இது ஏன்?**

மேகத்திற்கு அதிபதி இந்திரன். இந்திரனின் மகன் அர்ஜுனன் என்பதால் என்றும் ஒரு காரணம் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் இருப்பவனும், இல்லாதவனும் ..























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல வாழ்வு தரும் யோகா ..



சென்ற இதழில் யோகாசனம் பற்றிய எளிமையான விளக்கங்களை தந்திருந்தோம். கூடவே ஆரம்ப நிலைகளில் பெறவேண்டிய ஆசனங்களின் பயிற்சிக்குறிப்புகளையும் வழங்கியிருந்தோம். மிக இலகுவாக செய்யக்கூடிய ஆசனப்பயிற்சிகளை பின் பற்றுவதன் மூலமாக முக்கிய ஆசனங்களை செய்யக்கூடிய உடல் தகுதியை பெறலாம். இந்த ஆரம்ப நிலைகூட, உங்களை பெரிதான ஆரோக்கிய நம்பிக்கைக்கு உத்தரவாதமளிக்கவல்லது எனலாம்.



படிப்படியாக பெறும் ஆசனப்பயிற்சிகள் மூலமாக உடலும். உள்ளமும் பலம்பெறுகின்றன, வாழ்வில் பிடிப்பு ஏற்படுகின்றது, மனத்துன்பமும், நோய்களும் பறந்து விடுகின்றன.

முறையாக, ஒரு குருவை கீழ்படிந்து யோகம் கற்றலே சிறப்பானது. அதற்கான வாய்ப்புகள் குன்றியுள்ள நம் வாழ்விடங்களில் முடிந்த அளவு எழுத்து மூலமாக இப்பகுதியில் விளக்க முயல்கின்றோம். வந்தனைக்குறிய யோக ஆசிரியர்கள் முன்வந்து இப்பகுதியில் விளக்கம் தந்தால் நன்றியோடு பிரசுரிப்போம் ..







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சென்ற இதழில் வஜ்ஜிராசனம் செய்யும் முறைபற்றி சொல்லியிருந்தோம். அதன் சக ஆசனமாகிய பத்மாசனம் பற்றி இப்போது குறிப்பு தருகிறோம் ..


## 2 .. பத்மாசனம்

இந்த ஆசனம் பார்க்க இலகுவாக இருப்பதுபோல தோன்றினாலும், பழக்கத்தில் வர காலமெடுக்கும். தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டால் விரைவில் வசப்படும். வலிகளை தாங்கிக்கொண்டு பயின்று முடித்து விட்டால் இதைப்போல சுகம் தரும் ஆசனமே கிடைக்காது. அதோடு உடம்பில் இருந்த பாதி நோய்கள் தீர்ந்துவிடும்.

## செய்யும் முறை ..

இடது காலை வலது தொடையிலும், வலது காலை இடது தொடையிலும் வைத்து பழக வேண்டும். பின் கொஞ்சம் கொஞ்சமாக மாறி மாறிப்போட்டுப் பயிற்சி செய்யவும். தலை, கழுத்து, முதுகுத்தண்டு மூன்றும் நிமிர்ந்து நேர்க்கோட்டில் நிற்க வேண்டும். இது மிகவும் முக்கியம். உடல் தொண்ணூறு பாகையில் நின்றால்தான் முழுமையாக பயன் கிடைக்கும். மனதை ஒருநிலைப்படுத்தி, உடல் பாகங்களோடு சிந்தையை ஈடுபடுத்தி, இந்த ஆசனத்தில் இருக்கும் நிலையில் கிடைக்கும் பயன்கள் அளவற்றவை...





## பயன்கள் ..

தியானத்திற்கு இன்றியமையாத ஆசனம் இது. மனதை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு மிகச்சிறந்த ஆசனம் இதுவாகும். இந்த ஆசனத்தில் குண்டலினி சக்தி மேல் நோக்கி எழுகிறது.

இரத்த ஓட்டம் சீரடைகிறது. கலைஞர்களுக்கும், ரசிகர்களுக்கும் பெரும் பலனை இந்த ஆசனம் தருகிறது. இசை நிகழ்ச்சிகளில் நீண்ட நேரம் அமர்ந்திருப்பதற்கு இந்த ஆசனம் கைகொடுக்கிறது. அடிவயிற்றுப்பகுதிக்கு நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கிறது. வாத நோய் தீரும், நன்கு பசி எடுக்கும், உத்தீத பத்மாசனம், யோக முத்திரா போன்ற ஆசனங்கள் செய்ய இது கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும்.

நன்றி : அஷ்டாங்க யோகி,
நா. குலசிங்கம்

( பயிற்சிகள் தொடர்ந்து வரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் சைவ வழிகள் ..

முருகனுக்குறிய கோலங்கள் நிறைய உண்டு. அது தெரியா விட்டாலும் போடும் கோலம் ஒன்றில், 'ஓம் சரவணபவ' என்ற எழுத்துக்களை வரைந்தால் போதும். கந்தனின் கடாட்ஷம் இல்லத்தில் நிறைந்துவிடும். வாரத்தில் செவ்வாய், சனியில் இக்கோலத்தை இட்டு வழிபட்டுவர அழகு, அறிவு, ஆரோக்கியம் அதிகரிக்கும்.

ஓம்
ச
ர
வ
ண
ப
வ

## வாசலில் கோலம்.. வாழ்வில் பரவசம்!

## சமயச் செய்திகள் ..

அறநெறிப்பணிகள் மன்னார் மாவட்டத்தில் சீராக முன்னெடுக்கப்பட்டு வருவதால் இந்து மாணவர்களின் சமய உணர்வு விருத்தியடைந்து வருகிறது. அறநெறிப்பாடங்கள் கோயில் சார்ந்த சகல பகுதிகளிலும் முறையாக போதிக்கப்படுகின்றன. சனி, ஞாயிறுகளில் நடத்தப்படுகின்ற விஷேட வகுப்புகளில் பெரும் எண்ணிக்கையில் மாணவச்சிறுவர்கள் சமயம் கற்கின்றனர். குறிப்பாக, பின் தங்கிய கிராமத்து மக்களின் கவனத்தை பிறசமய போதனைகள் பாதிக்காத வண்ணம் அறநெறித் தொண்டர்கள் உழைத்துவருவது போற்றத்தக்கது. பாடப்புத்தகங்கள், சீருடைகள் போன்ற வசதிகள் மாவட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைகின்றன. சைவப்பணியை சிரமேற்கொண்டு வகுப்புகளில் உழைத்து வருகின்ற ஆசிரியைகளும் குறிப்பிடத்தக்கவர்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனியிலே நோற்கும் அரிய விரதங்கள் ..

## அத்தனையும் ஐஸ்வர்ய சுகங்கள் ..

**ஹரிஸயந ஏகாதசி :** பகவான் படுத்துக்கொள்ளும் ஏகாதசி இது. ஆவணி 25 பகவான் படுக்கையிலே புரளுவது. பரிவர்த்தன ஏகாதசி ஐப்பசி 23 எழுந்திருக்கும் நாள். வ்யுந்தான அல்லது, ப்ரபோதினி ஏகாதசி எனப்படும். எல்லா ஏகாதசிகளுமே புண்ணியம் தருவன என்றாலும், பகவான் படுப்பது, புரளுவது, எழுந்திருப்பது என்ற பகவானின் சிந்தனையோடு அனுஷ்டிக்கும் அனுபவம், அதிக புண்ணியம் தருகிறது.




ஆனி மாதம் கறிகாய் கனிகளையும் சாப்பிடலாகாது. ஒரு மாதம் தயிரையும், ஒரு மாதம் பாலையும், ஒரு மாதம் பருப்பு வகைகளையும் உண்ணலாகாது. கஷ்டப்படாமல் எதுவும் கிடைக்காது என்பதற்கு இது பொருந்துமெனினும், தூய இயல்பு வாழ்வில் முடிந்தளவு செயல்படுத்தலாம். பேரொளி மிக்க இந்து சமயத்தின் பெருமைக்கு, ஆன்மீக பலமிக்க அனுட்டானங்களே காரணமென உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விரதத்தைக்கூட ஒருசில சந்நியாசிகளே அனுஷ்டிப்பதும் உண்மை.

### சாதுர்மாஸ்ய விரதம்

*ஆனி 30ந் திகதி:*
சாதுர்மாஸ்ய சாக விரதம் ஆரம்பம்.

*ஆடி 29ம் திகதி:*
சாதுர்மாஸ்ய திதி விரதம்

*ஆவணி 26ந் திகதி:*
சாதுர்மாஸ்யஷீர விரதம்

*புரட்டாசி 24ந் திகதி:*
சாதுர்மாஸ்யத்விதள விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துளிகள் பக்கம் ..



# கதகளி!

கேரள மாநிலத்தின் கண்கவர் நடனம் இது. அம்மக்களின் பாரம்பரிய கலைகளிலேயே உயர்ந்த இலக்கணங்களோடு விளங்கும் இதனை ரசிக்காதவர் இருக்க முடியாது. பல பாத்திரங்களைக் கொண்டு நாடகமாகவும். நாட்டியமாகவும் இதனை வடிவமைப்பார்கள்.

இராமாயணம். மகாபாரதம், மற்றும் புராணங்களை மையப்பொருளாகக் கொண்டு கதகளி நடனங்கள் அமைக்கப்படும். கதகளி என்ற சொல்லுக்கு ‘கதையை அடித்தளமாகக் கொண்ட ஆடல்’ என்று பொருள். ‘ஆட்டக்கதை’ என்று இன்னொரு பெயரும் இதற்கு உண்டாம்.

பழைய மேடைச் சம்பிரதாயங்களையும், தேவதைகளை வழிபடும் ஆட்டங்களையும் கதகளி நடனத்தில் காணலாம். ஆரியர்களின் வருகைக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மக்களின் நாகரீகங்களை வெளிப்படுத்தும் நளினங்கள் இந்நடனத்தின் தனிச்சிறப்பு. முடியேட்டம், பகவதி பாட்டு, காளியாட்டம், தூக்கு போன்ற பல அடிப்படை அம்சங்களோடு மேடையேறுகின்ற இக்கலை, ரசிகர்களை புல்லரிக்க வைக்கும்.

இதில் இன்னும் விஷேசமாக கருதப்படுவது -- பேச்சு இல்லாத அபிநயம், சமயத்தொடர்பு, வினோத வேஷக்கட்டு, மந்திரவாதத் தொடர், சண்டைக்காட்சிகள் போன்ற அற்புதங்களாகும். எல்லாம் பழம்பெரும் காவியங்களுக்குள் நம்மைக் கொண்டுசெல்லும்.

முக பாவமும், கையசைவும் இந்நடனத்தில் தனித்துவம் கொண்டவை. ஒப்பனையும், உடையலங்காரமும் சொல்லமுடியாத வியப்பை தருபவை.

01

கதகளி நடிகர்கள் பச்சை, கத்தி, கரி, தாடி, மினுக்கு என ஐந்து வகை முகவேஷத்தை ஒட்டி தேர்ந்தெடுக்கப் படுகின்றனராம். தேவர்கள், கிருஷ்ணன், இந்திரன் போன்றவர்கள் பச்சை வேடத்திற்கு உரியவர்களாம். இராவணன், ஹம்சன், சிசுபாலன் முதலிய அசுரர்களை குறிப்பவர்கள் கத்தி வேடத்திற்கு உரியவர்களாம். தாடி வேஷம் போடுபவர்களில் கறுப்புத் தாடிக்குறியவர்கள் துச்சாதனன் போன்ற வேஷத்திற்கும், வெள்ளைத்தாடியுடையோர் அனுமன், சுக்ரீவன் போன்ற வேடங்களுக்கும் பொருந்துவார்களாம். சூர்ப்பனகை போன்ற குரூர தேவதைகளுக்கு கரி வேஷமுடையோரும் ரிஷிகள், பிரம்மா, அரம்பையர் போன்றோர்க்கு மினுக்கு வேஷக்காரர்களும் தேவைப்படுவாரகளாம்.

02

03

பேச்சில்லாத நாடகமாகையால் அபிநயமே பிரதானமாகிறது. இதில் காட்டப்படும் லாவகமே கதையை தத்ரூபமாகக் கொண்டு செல்கிறது. 10 அல்லது 15 வயதிலேயே கடுமையான பயிற்சி ஆரம்பமாகி விடுகிறது.

கதகளி நிகழ்ச்சி நடக்க இருப்பதை மத்தளம் முழங்கி அறிவிப்பது ஒரு சம்பிரதாயமாக இருந்துவருகிறது. இரவு 9, அல்லது 10 மணிக்கு தொடங்கும் கதகளி நடனம் விடியும் வரைகூட தொடர்ந்து நடக்கும். வெளிநாட்டவர்களை சந்தோஷத்தில் கட்டிப்போட்டு விடுகிற கலை இது.

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேடையையும், சபையையும் பிரித்துக்காட்டும் வகையில் பெரிய குப்பு விள்க்கு ஒன்று இடையில் வைக்கபட்டு, அதன் ஒளியில் நாட்டியம் நடக்கும். அரங்குகழி எனப்படும் நிகழ்வாக மத்தளம், செண்டை வாசிப்பார்கள். பின்னர் தெய்வ வணக்கம். அதன்பிறகு திரைநோக்கு.

05

திரைக்குப்பின்னாலிருந்து கலாசங்கங்களுடன் பக்தி ரஸமான பாட்டு கேட்க, முன்னரங்கில் நாட்டியக்கலைஞர்களின் நடிப்பு அற்புதம் காட்டும். சில வேளைகளில் திரைக்கு வெளியே முகத்தைப் பதித்து, பாடுபவர்கள் ரசிகர்களை இன்பத்தில் மூழ்கடிப்பார்கள்.

06


பாட்டும். நடனமும் அநேகமாக இடம்பெறும் காதற்காட்சிகளுக்கு பதிஞ்ச ஆட்டம் என்று பெயர். இந்த வகை நடனத்தில் ஒரு காட்சி முடிய ஒருமணிநேரம்கூட எடுக்குமாம். அப்படியொரு உருக்கமும், பிடிப்பும் தோன்றுமாம்.

07



08

கதகளி நடனங்களில் வரும் கதையில் தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையே போராட்டம் நடந்து, இறுதியில் தர்மம் வென்று நிலைப்பதாக முடிவு வரும். இதனைப் போதிக்கும் கதகளியில் வீரம், ரௌத்திரம் போன்ற ரஸங்களை வெளிப்படுத்தும்போது பார்ப்பவர்கள் மெய்சிலிர்த்துப்போவார்கள்.




09

அசுர பாத்திரங்கள் மேடையில் தோன்றும்போது கர்ஜனை செய்வதும், திரைகள் குலுங்குவதும், மேடை அதிர்வதும் திகிலடைய வைக்கும். இவ்வாறாக இரவு முழுதும் களிப்படையச்செய்யும் கதகளி நடனம் விடியும் நேரத்தில் பக்தி ரஸமான நடனத்தோடு நிறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*"இந்து என்ற பெயர் தாங்கிய மனிதன் எந்த நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தாலும், எந்த மொழியை பேசினாலும், அந்தக் கணமே உங்களுக்கு மிக நெருங்கியவனாகவும், இனியவனாகவும் ஆகிவிட வேண்டும் .."*

-- சுவாமி விவேகானந்தர்

# விவேகானந்தர்..

## சுவாமிஜியின் 150 வது ஆண்டு விழா மகிழ்ச்சி .. இவ்வருடம் முழுவதுமே!





இமயமலையில் ஒருமுறை விவேகானந்தர், நீண்ட மலைப்பாதை வழியாக சென்றுகொண்டிருந்தார். வழியில் முதியவர் ஒருவர் மலைச்சரிவு ஒன்றில் ஏற முடியாமல் களைத்துப்போய் அமர்ந்திருப்பதைக் கண்டார். அந்த முதியவர் விவேகானந்தரிடம், ''இந்த பாதையை எப்படிக் கடப்பேன் .. என்னால் இதற்குமேல் இயலவில்லையே ..'' என்று வருந்தினார்.

அந்த பெரியவர் கூறிய வார்த்தையை பொறுமையுடன் கேட்டவாறே சுவாமிஜி, '' பெரியவரே, சற்று கீழே பாருங்கள். எவ்வளவு பெரிய பாதாளம்! உங்கள் காலுக்கு கீழே நீண்டு தெரிகின்ற அதன் பாதை முழுவதுமே உங்களால் கடக்கப்பட்டதுதான். உங்களின் முன்னால் மேலே தெரிகின்ற பாதையும் விரைவில் உங்கள் காலுக்குக் கீழே போய்விடும்'' என்றார்.

தெம்பூட்டிய இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அந்த முதியவருக்கு களைப்பு போன இடமே தெரியவில்லை. உற்சாகம் மேலிட தொடர்ந்து நடக்கலானார்.

ஆம்! இதுபோன்று சுவாமிஜியின் வழிகாட்டல்கள் ஏராளம். அதன் வழி நடப்போர்க்கு சோர்வோ, பின்னடைவோ ஒருநாளும் கிடையாது. இந்துக்களின் மகத்தான ஆன்ம ஞானத்தை வெளிக்கொணர்வதில் அவர் தந்த உழைப்பு, காட்டிய தீவிரம் போற்றுதற்குறியது.

'இந்துவே, விழித்துக்கொள்!' ..' என்று உலகை நோக்கி அவர் முழங்கியபோது, இந்துக்கள் மட்டுமல்லாமல் முழு உலகமுமே விழித்துக்கொண்டது. மனித வாழ்க்கைக்கு அவசியமான சக்திகள் இந்து மதத்தில் இருப்பதை அப்போதுதான் உலகம் அறிந்தது. ஆச்சரியத்தில் மூழ்கியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘யார் இவர் ..? ’’ என்ற கேள்வி சர்வதேசம் முழுவதுமே வியாபிக்க, எழுச்சியான புதிய சமுதாயத்தை உருவாக்கினார். சேவையான வாழ்வே சிறப்பான வாழ்வு, வீரமான வாழ்வு என்பதைப் புரிய வைத்தார். மனித சமுதாயம் மறக்கமுடியாத மகானாக நிலை பெற்றார்.

அப்படியான குருதேவர் இந்த மண்ணில் தடம் பதித்து 150 ஆண்டுகள் நிறைவடைகின்றன! அதுவும் இந்த ஆண்டில்!! என்னே பேரானந்தம் ..

இந்த தெய்வீக சந்தர்ப்பத்தில் விவேகானந்தரின் திரு அவதாரத்தை மீண்டும் ஒருமுறை காணவும், அனுபவிக்கவும் மனிதகுலம் தயாராகிறது. ஆம், சுவாமிஜியின் 150வது ஜயந்தி விழா இந்த வருடம் முழவதும் கொண்டாடப்பட இருக்கிறது. 2012 - 2013 என்ற காலப்பகுதியை உள்ளடக்கி, நாடளாவிய அளவில் விழா நிகழ்வுகளை விழாக்குழுவினர் ஒழுங்கமைத்து வருகின்றனர். சகல மாவட்டங்களிலும் விழாக்குழுக்கள் அமைக்கப்பட்டு, நிகழ்ச்சிப் பொறுப்புகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் சுவாமிஜியின் சிந்தனைகளை வெளிப்படுத்தும்! இளைய தலைமுறைக்கு ஆன்ம பலத்தை ஊட்டும்!!
உலகை மீண்டும் ஒருமுறை இந்துவின் பக்கம் ஈர்க்கும்!!!



*சுவாமிஜியின் 150வது ஆண்டு விழா நாடெங்கும் நடக்கப்போகிறது. அதுவும் ஒரு வருஷத்துக்கு! வரலாற்றுச் சிறப்புமிக்க இக் காலகட்டத்தில் விவேகானந்தரின் எத்தனையோ சிறப்புகளை அறிந்து அனுபவிக்கப் போகிறோம். கண்களுக்கும், காதுகளுக்கும், சிந்தைக்கும் பெரு விருந்து கிடைக்கும்.*

*அதன் ஒரு பகுதியாக, ஒரு மாத வெளியீடும் வெளிவருகிறது.*

*அதன் பெயர் ‘விவேகானந்தம்’ ! அழகுறு கையேடாகிய இதில் சுவாமிஜியின் குறிப்புகள், சம்பவங்கள், செய்திகள் என்று நிறைய வருகின்றன.*

*இந்து ஸவயம்சேவக சங்கத்தினரே இந்த அரிய வெளியீட்டை தருகின்றனர்.*

*ஜெய் பகவான் ..!*

சுவாமிஜியின் 150வது ஆண்டு விழாவை மிகச்சிறப்பாக முன்னெடுப்பதற்கு விஷேட குழு அமைக்கப்பட்டு, அதன் தலைவராக திரு. டி.எம். சுவாமிநாதன் அவர்கள் பணியாற்றுகிறார். இவர் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தின் அறங்காவலர் ஆவார்.

‘இந்து ஸ்வயம் சேவக சங்கம்’ சார்பில் அமைக்கப்பட்ட அகில இலங்கை விழாக்குழு இதுவாகும். இக்குழுவில் இலங்கையில் இருக்கின்ற முக்கியமான இந்துசமயப் பெரியார்கள் பலரும் அங்கம் வகிக்கின்றனர். நாடு முழுவதிலும் இருந்து, இக்குழுவில் உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

இக்குழுவினரின் சார்பாக நாடு முழுவதிலும் கொண்டாடப்பட இருக்கும் விவேகானந்தரின் பிறந்த வருட நிகழ்வுகள் சைவ சமயத்திற்கு உரமுட்டி, இந்துக்களைப் பெருமைப்படுத்தும். அதன் ஒரு பகுதியாக, கொழும்பில் கடந்த 26.02.2012 அன்று நடத்தப்பட்ட துவக்கவிழா மிகச்சிறப்பாக இருந்தது. புகழ்பெற்ற சரஸ்வதி மண்டபத்தில் நடந்த இவ் விழாவில் பெருந்திரளாக மக்கள் கலந்துகொண்டனர். 24 மாவட்டங்களில் இருந்து பிரதிநிதிகள் வருகை தந்தது மகிழ்ச்சியையும், வியப்பையும் அளித்தது.

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தலைமைத்துறவி சுவாமி சர்வரூபானந்த மகராஜ் மங்கள விளக்கேற்றி விழாவை தொடக்கியதும், 125 சிறுவர் சிறுமியர் பங்குபற்றிய யோகசாப் நிகழ்ச்சியும், சான்றோர்களின் ஆன்மீக உரைகளும் குறிப்பிடத்தக்கவை. இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களின் வாழ்த்துரையோடு, தொடர்ந்த அத்தனை நிகழ்ச்சிகளுமே விவேகானந்தம் தந்தன எனலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றுத் தரும் கடைசிப் பக்கம் ..!



இருக்கவே இருக்கின்றன தெய்வீக நாமங்கள் ..
கவலை எதற்கு?

# ‘ஹே, ராம் !”



இருட்டு என்றால் அந்தச் சிறுவனுக்கு மிகவும் பயம். இருட்டுப்பகுதிகளுக்கு செல்லவே மாட்டான். பூதம், பிசாசு என்றெல்லாம் கதைகளில் கேட்டதால் இப்படி இருளுக்கு பயந்தான்.

ஆனால், பிற்காலத்தில் உலகத்தையே தனது துணிச்சலால் வியக்க வைத்தவன் அவன். பெரும் தேசத்தையே மீட்ட பெருமைக்குறியவன். அவன் வேறு யாருமல்ல ..
இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்திதான் அது.
அவருக்கு துணிச்சலை ஊட்டியவர் ஒரு பெண். சிறு வயதான அவரின் வீட்டில் தாதியாக வேலை செய்து வந்த ரம்பா என்ற முதிய பெண்மணியே அவள். காந்தியை அளவற்ற பாசத்தோடு நேசித்தவர். இருளைக் கண்டு காந்திஜி சிறு வயதில் பயப்படும்போதெல்லாம் அருகில் அணைத்து, ராம ஜபம் சொல்லிக்கொடுப்பாள்.
‘‘பயம் வரும்போதெல்லாம், நீ ராம நாம ஜபம் செய் ..” என்று தைரியமூட்டினாள்.
இது காந்திஜியின் மனதில் ஆழமாகப் பதிந்தது. பேய், பிசாசுகள் பற்றிய பயம் நீங்கியது. ஆன்மபலம் பெருகியது.
சூரியன் அஸ்தமிக்காத பெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே எதிர்த்து நின்றார். வல்லமைமிக்க ஆங்கிலேயர்களை நாட்டைவிட்டே துரத்தினார்.
இந்த அளவுக்கு அவருக்கு நெஞ்சுறுதியையும், சக்தியையும் தந்தது, ராம நாமம்தான் என்று அவரே கூறியிருக்கிறார். கோட்ஸேயினால் சுட்டுக் கொல்லப்பட்டபோது, உயிர்பிரியும் வேளையில் காந்திஜி உதிர்த்த கடைசி வார்த்தை ‘ஹே, ராம் !.:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த சஞ்சிகை

உருவாகியிருப்பது ஒரு சிவசித்தம்.
இந்துதர்ம மேன்மைகளை இந்துவே முழுமையாக அனுபவிக்கத் தவறுவது கவலையன்றோ ..
ஒருசில துளிகளை மட்டும் ருசித்துவிட்டு முழு தேன்குடத்தையும் ஒரு மூலையில் யாராவது தள்ளி வைப்பார்களா..?
நாம் அதைத்தான் செய்கிறோம். முழுமையாக நம் சமயத்தை அனுபவிக்காத கடைநிலை இந்துவாகவே வாழ்கிறோம்.
பிரபஞ்சத்தைப்போன்று எல்லைகளற்ற இந்து சமயத்திற்கு உரித்தானவர்கள் என்ற பெருமையை பெற்றிருந்தும், அதன் ஆரம்ப வாயிலைக்கூட திறக்காமல் இருக்கிறோமோ என்று தோன்றுகிறது.
இதை புரிந்துகொண்டு உழைத்தால் சமயப்பணிகள் இன்னும் உன்னத நிலைக்கு உயரும் அல்லவா?
அந்த ஆரம்ப வாயில் என்ன..?
பக்தி மார்க்கம், ஞான மார்க்கம், யோக மார்க்கம்.
பக்தி மார்க்கத்தைப்பொறுத்தவரை நம் மாவட்டத்தில் அவ்வளவுக்கு குறையில்லை என்பது மகிழ்ச்சியே ..
அதிலும் உற்சவங்கள், நித்திய பூஜைகள், விரதங்கள், வழிபாடுகள் என்று எங்கும் காணமுடிகிறது. அதுபோலவே கோயில்கள், அதன் பரிபாலகர்கள், அவர்களால் முன்னெடுக்கப்படும் தொண்டுகளும் போற்றத்தக்கதாக உள்ளன.
ஆக, பக்தி மார்க்கம் சிறந்திருக்கிறது.
ஆனால் அடுத்த கட்டத்திற்கு நாம் போகவில்லை.
அதைப்பற்றி சிந்திப்பதுகூட இல்லை. அதனால் ஞானமும், யோகமும் வசமாகவில்லை.
தன்னுள் இறைசக்தியை காணும் ஞானமும், அதன்படி நடந்து புகழ்பெறும் யோகமும் இன்றி, கிடைக்கும் வாழ்வை மட்டுமே நடத்துகிறோம்.
உலக நாடுகளே பிரமித்து நாடுகின்ற அற்புத சக்திமிக்க இந்து ஆன்மீகத்தை நாமே அனுபவிக்காமல், வழிபாடுகளுடன் மட்டும் சுருங்கிவிடுகிறோமே ..
பக்திநிலைக்கும் அப்பால் பேரின்பத்தை அறிமுகப்படுத்த முதலில் நம் சமயப் பொக்கிஷங்களையும், புராண அமிர்தங்களையும் ஊட்டவேணடுமென்றுதான் இந்த சஞ்சிகையை வெளியிடுகிறோம்.
ஞானோபதேச நிகழ்ச்சிகள், சத்சங்கங்கள் போன்றவையும் நம் ஊர்களில் இல்லை. எனவே, மாதாந்தம் வர இருக்கின்ற இதில் நம் சைவத்தின் சிறப்புகளும், வழிகாட்டல்களும், குறிப்புகளும் பெருமளவில் வந்துகொண்டிருக்கும்.
இந்த இறைபணியை நிறைவேற்ற உதவும்படி சமய அன்பர்களையும், பெரியோர்களையும் பணிவோடு வேண்டுகிறோம் ..

## அடுத்த இதழில்...

- கிரக நன்மைகள்..
- ராசிப்பலன்கள்..
- காக்கும் பதிகங்கள்..
- சைவ நிகழ்வுகள்
- உள்ளூர் தலங்கள்..
- ஆன்மீக சாதனைகள்
- அவதாரத் தொடர்..
- புராணக் கதைகள்..
- இந்துக் கலைகள்..
- விரத சமையல்கள்..
- மாணவர் ஆன்மீகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவர்த்தன மலையும், இந்திரனின் கர்வமும் ..

மும்மூர்த்திகளிலும் பெரியவன் தானே என்ற கர்வம் ஒருமுறை இந்திரனுக்கு வந்துவிட்டது. இதனால் அவனுக்கு பாடம் புகட்ட முடிவு செய்தார் கிருஷ்ணர். நேரே தனது தந்தையிடம் சென்று ..

"தந்தையே, இந்திர விழாவை இம்முறை இந்திரனுக்கு எடுக்க வேண்டாம். உயிர்களையும், தாவரங்களையும் காக்கும் கடமையை இயற்கையே செய்கிறது. இயற்கையின் நாயகனாக நம்மையெல்லாம் இங்கே காக்கின்ற கோவர்த்தன மலையை பூஜித்து, இம்முறை இந்திர விழாவை அதற்கே தருவோம் .." என்றார். கண்ணன் வார்த்தைக்கு மறுசொல் ஏது? கோவர்த்தன மலைக்கே விழா எடுக்கும்படி கட்டளையிட்டார் நந்தகோபன். மக்களும் இதனை ஏற்று தமது பிரியமான கோவர்த்தன மலையை சுத்தப்படுத்தி, சொர்க்கலோகம் போல அலங்கரித்தார்கள்.

தன்னை அலட்சியம் செய்துவிட்ட ஆயர்குல மக்கள்மீதும், கிருஷ்ணர் மீதும் ஆத்திரம் கொண்டான் இந்திரன். தேவர்களின் அரசனான அவன் வருண பகவானையும், வாயு தேவனையும் அழைத்து கட்டளையிட்டான் ..


"புயலையும், மழையையும் பொழிந்து எல்லா வீடு வாசல்களையும் நாசமாக்கிவிடுக.." என்று கர்ஜித்தான். அவ்வாறே, இருவரும் செயல்பட, பிருந்தாவனத்தை பெரும்புயலும், மழையும் தாக்கின. மக்கள் தமது உடமைகளுடன் வெள்ளத்தில் தத்தளித்தனர். கால்நடைகள் அலறியவாறு தஞ்சம்தேடி அங்குமிங்கும் ஓடின.


"எங்களைக் காப்பாற்ற யாரும் இல்லையா? "
என்ற மக்களின் ஓலம் காதில் விழ, ஓடி வந்தார் பரந்தாமன்.

"தாயே, தந்தையே அஞ்சாதீர்கள்! இது அந்த இந்திரனின் வேலை. நமது பூஜையை ஏற்றுக்கொண்ட கோவர்த்தன மலை இப்போதும் நம்மைக் காக்கும்.." என்றவாறு, மலையை நெருங்கினார். தனது கைகளால் அதனைத் தூக்கி, விரல் நுனியில் வைத்து குடையாக உயர்த்திப் பிடித்தார்.


அக் குடையின் கீழ சகலரும் ஓடிவந்து அடைக்கலமாயினர். கால்நடைகளும் சந்தோஷமாக ஓடி வந்து இளைப்பாறின. பல நாட்கள் முயன்று பார்த்த இந்திரன் கர்வம் அடங்கி ஓடிவந்து, கண்ணனைப் பணிந்தான்.
மக்கள் மகிழ்ச்சியாக வீடுகளுக்குத் திரும்பினர் ..










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org